சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செவ்வாய்க்கிழமை 22.02.2022
supeedsam.com
supeedsam@gmail.com




# விடுதலைப் புலிகளின் தலைவர் சிறந்த போர் வீரன்!
# எனக்கு அவர் மீது தனிமரியாதை உண்டு

## நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா

(காந்தன்)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு பயங்கரவாதக் குழுவின் தலைவர். எனினும், அவர் சிறந்த போர் வீரன். அதனால் அவர் மீது எனக்குத் தனிமரியாதை உண்டு என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பின்னரே உயிரிழந்தார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.



02 ஆம் பக்கத்தில்...

# விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் குறித்து அமைச்சர்கள் பொய், பித்தலாட்டங்கள்

## பண்பு தெரியாத வகையில் பிரபாகரன் பற்றி டக்ளஸ் வசை பாடுவதாக சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

பிரபாகரனின் இறப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் அமைச்சர்களின் மாறுபட்ட கருத்துக்களானது பித்தலாட்டங்களும் பொய் பிரட்டுக்களுமே இருப்பதாகவே நாங்கள் உணருகின்றோமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச்செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



02 ஆம் பக்கத்தில்...

# இன்றும் நாடு முழுவதும் மின்வெட்டு!

இலங்கை மின்சார சபையின் வேண்டுகோளுக்கு இணங்க இன்றைய தினமும் (22) செவ்வாய்க்கிழமை நாட்டில் மின் வெட்டு அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல மின் உற்பத்தி நிலையங்களுக்கு போதியளவு எரிபொருள் கிடைக்காமை காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன்படி, முன்னதாக வெளியிடப்பட்ட மின்வெட்டு அட்டவணைக்கமைய ஏ,பி,சி குழுக்களுக்கு பிற்பகல் 4.30 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரையிலான காலப்பகுதியில் சுழற்சி முறையில் 2 மணித்தியால மின்வெட்டு அமல்ப்படுத்தப்படவுள்ளது.

மேலும், ஏனைய குழுக்களுக்கு குறித்த காலப்பகுதியில் 3 மணித்தியாலம் மின்வெட்டு அமுப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை நாளைய மின்வெட்டுக்கான அட்டவணையை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

# சர்வதேச தாய்மொழி தின நிகழ்வில் பிரதமர் பங்கேற்பு

(வாஸ் கூஞ்ஞ)

சர்வதேச தாய்மொழி தினம் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் திங்கள் கிழமை (21.02.2022) முற்பகல் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

ஆண்டுதோறும் பெப்ரவரி 21 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச தாய்மொழி

02 ஆம் பக்கத்தில்...



# எரிபொருளின் விலை அதிகரிக்கும்?

எரிபொருள் இறக்குமதி மீதான வரிகளை தற்காலிகமான இரத்து செய்யாவிடின் ஒரு லீற்றர் டீசலின் விலையை 52 ரூபாவினாலும், பெற்றோலின் விலையை 19 ரூபாவினாலும் அதிகரிக்க நேரிடும் என வலுசக்தி துறை அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் எரிபொருளுக்கான வரி விலக்கு வழங்க வேண்டும் அல்லது எரிபொருளின்

02 ஆம் பக்கத்தில்...

# அரசியல் உட்பூசல்கள் நாட்டுக்கு பயனளிக்காது

சில அரசியல்வாதிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை அவதானிக்கும் போது அமைச்சர்கள் தமது அரசியல் அதிகாரத்தை பலப்படுத்த முயற்சிக்கின்றனர் என்பது தெளிவாகின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறான முரண்பாடுகள் மக்களுக்குச் சிறந்த சேவை செய்வதற்கான நகர்வுகளை அடிப்படையாகக்

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கில் மூன்று விவசாய இரசாயன ஆய்வுகூடங்கள் 1000 மில்லியன் ஒதுக்கீடு; மட்டக்களப்பில் ஆளுநர் தகவல்





(க.ருத்திரன் )

கிழக்கு மாகாணத்தில் பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கு அமைவாக சேதனப்பசளை விவசாயத்தை ஊக்குவிப்பதே எமது நோக்கமாகும். என கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் தெரிவித்தார். சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று(21)மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
கல்வியே துணை
பள்ளித் தலைமையத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero

# கோழிப்பண்ணையைக் கூட தற்போது அரசாங்கத்தினால் சரியாக நடத்த முடியாது!



இலங்கையின் முன்னாள் காவல்துறைமா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 855 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

ஆனால் அவர்கள் இருவரும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் தோல்வியடைந்த நிலையில் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

02 ஆம் பக்கத்தில்...

# 7 வருட சேவையினை பாராட்டும் நிகழ்வுகள்

(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆலையடிவேம்பு தெற்கு வங்கியில் கடந்த 7 வருடங்களுக்கு மேலாக சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றி மாவட்ட செயலகத்திற்கு மாற்றம் பெற்றுச் செல்லும் க.அசோக்குமாரின் சேவையினை பாராட்டி சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவிகளது ஒத்துழைப்போடு அமைப்பின் உறுப்பினர்களின் பங்களிப்போடு இடம்பெற்றுவரும் பாராட்டு நிகழ்வுகளில் பலர்கலந்து கொண்டு நிகழ்வுகளை சிறப்பித்து



வருகின்றனர்.

இதற்கமைவாக பனங்காடு சின்னப்பனங்காடு மகாசக்தி கிராமம் கண்ணகிகிராமம் தீவுக்காலை கோளாவில் 01 மற்றும் 02, 03 ஆம் பிரிவுகளில் பாராட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் முகாமையாளருக்கு மக்கள் மலர்மாலை அணிவித்து சிறந்த வரவேற்பை வழங்குவதுடன் நினைவுச்சின்னங்களையும் வழங்கி வைத்து அவரது சேவையினை கௌரவப்படுத்தி வருகின்றனர்.

இடம்பெறுகின்ற நிகழ்வுகளில் ஆலையடிவேம்பு தெற்கு சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச்சபை தலைவி வலய உதவி முகாமையாளர் வங்கிச்சங்க உதவி முகாமையாளர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்து வருகி;ன்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் மூன்று விவசாய இரசாயன ஆய்வுகூடங்கள்





கிரான் ரெஜி கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது...

எதிர்காலத்தில் சேதனப் பயிர் உற்பத்தியை மேற்கொண்டு அதன் தரத்தை பரிசோதனை செய்வதற்கு இரசாயன ஆய்வு கூடங்களை கிழக்கு மாகாணத்தில் 3 மாவட்டங்களிலும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.அதன் மூலம் விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களை வழங்கவுள்ளோம். மேற்படி நடவடிக்கைக்காக 1000 மில்லியன் ரூபா நிதி 3 மாவட்டங்களுக்கும் வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது.இவ் நிதியானது கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது. விவசாயிகள் தங்களது மண்ணின் தரம் மற்றும் சேதனப்பசளையின் தரத்தினை உறுதி செய்ய ஆய்வு கூடங்கள் நிறுவப்படவுள்ளது.என அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு விசாய திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண அளுனர் அனுராதா ஜகம்பத்,விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜே.முத்துபன்டா, விசேட அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் கிழக்கு மாகாண விவசாய ஆணையாளர் டாக்டர் எஸ்.எம்.ஹீசைன். கோறளைப்பற்று பிரதேச சபை தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் மற்றும் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இரசாயான பசளை பாவனையின்றி சேதனப் பசளையினை பயன்படுத்தி விவசாயம் மற்றும் சிறுதோட்டப் பயிர் செய்கை மூலம் சாதனை படைத்த விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு காசோலையும் சிறந்த விவாசாயி என்ற நினைவுச் சின்னங்களும் ஆளுநரினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் குறித்து அமைச்சர்கள் பொய்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இறப்புத் தொடர்பில் அரசாங்கமும் அரசாங்கத்தில் உள்ளவர்களும் மாறுபட்ட கருத்துக்களையே கூறிவருகின்றார்கள். இதன்மூலம் போர்க்குற்றம் நடந்தது என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றார்கள். இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பண்பு தெரியாத வகையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி வசைபாடியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியான ஈ.பி.டி.பி பற்றி பொது மக்களுக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு படுகொலைகள் அட்டூழியங்கள் புரிந்தார் ? என்பது தெரியும். 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரத்திற்காக ஊர்காவற்றுறை சென்றபோது ஈ.பி.டி.பி குண்டர்களினால் சுட்டும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் மூவருக்கு இரட்டை மரணதண்டனை தீர்ப்பு நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டது.

பிரபாகரன் உயிருடன் சரணடைந்தார் என்று டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார். இது முதல் தடவை அல்ல. அப்படி என்றால் சரணடைந்தவர்களை நீங்கள் படுகொலை செய்தீர்களா? என்பதற்கு பதில் கூறவேண்டும். இறுதியுத்தத்தின்போது பிரபாகரனின் படம் என காண்பிக்கப்பட்ட படத்தில் நெற்றியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் இருந்தமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிரபாகரன் சரணடைந்திருந்தால் விசாரணை செய்திருப்பீர்கள் இலங்கை பூராகவும் பவனியாக கொண்டு சென்றிருப்பீர்கள். ஆனால் தற்போது குறித்த விடயங்கள் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணாகவே கூறிவருகின்றீர்கள். சரணடைந்த பின்னர் கொல்லப்பட்டார் என்பது உங்கள் கருத்து. அவ்வாறு என்றால் இந்தப் போர்க்குற்றத்திற்கு யார் பொறுப்பு? இதற்கு யார் பதில் கூறுவது? அன்று இராணுவத் தளபதியாக இருந்த சரத்பென்சேகா,பிரபாகரன் ஒரு வீரன் கடைசி வரை போராடியே மறைந்தார் என்பதை கூறுகின்றார்.

படைத்தளபதியின் கீழ் இருந்த ஓய்வுநிலை ஜெனரல் கமால் குணரட்ண என்பவர் கழுத்தில் இருந்த இலக்கம் ஒன்று என்ற இலக்கத்தகட்டையும் பிஸ்ரலையும் கைப்பற்றினோம் எனக் கூறியுள்ளார். அவ்வாறு என்றால் பிஸ்ரலுடனா அவர் சரணடைந்தார்? சரணடைவது என்றால் ஆயுதங்கள் இல்லாமல் தான் சரணடைவது. அவருடைய உடலை நாங்கள் புதைத்துவிட்டோமென ஒரு சிலர் கூறினார்கள். எங்கு புதைத்தோம்? யார் புதைத்தது? என்பது கூறப்படவில்லை. இன்னுமொரு பகுதியினர் எரித்துவிட்டு சாம்பலை கரைத்துவிட்டோம். எறிந்துவிட்டோம் என்றார்கள்.ஒரு போர் வீரனது உடலுக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்பது மரபு.

பிரபாகரனது இறப்புத் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களையே அரசாங்கங்கள் கூறிவருகின்றன. பிரபாகரனின் உடலை அடையாளம் காண்பதற்காக கருணாவையும் தயா மாஸ்ரரையும் கூட்டிச் சென்றீர்கள். ஒருவர் கொல்லப்பட்டால் குறித்த நபர் இந்தியாவாலும் தேடப்படுகின்றார் என்றால் ஏன் அவரின் மரண விசாரணை நடைபெறவில்லை.

உலங்கு வானூர்தி மூலம் கருணாவை கூட்டிச் செல்ல முடியும் என்றால் ஏன் சட்ட வைத்திய அதிகாரியை கூட்டிச்சென்று மரண சான்றிதழை வழங்கவில்லை? இந்தியாவிற்கு ஒரு நீதிமன்ற சான்றிதழை வழங்கியுள்ளீர்கள்ஃ இதனைவிட ஏன் டி.என்.ஏ. பரிசோதனை செய்யவில்லை? அன்றைய காலத்தில் பிரபாகரனின் தாயும் தந்தையாரும் பனாகொட இராணுவ முகாமில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

பிரபாகரன் எனக் காண்பிக்கப்பட்ட உடலை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒன்றில் அவர் தன்னைத்தானே மாய்த்திருக்கவேண்டும். அல்லது அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லைய? என்பதை வரலாறு கூறும். அதனை விடுத்து சரணடைந்தார். சடலத்தை எடுத்தோம் புதைத்தோம் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தால் எதற்காக பிரபாகரனின் தாயாரிடன் பிரபாகரன் எங்கு இருக்கின்றார் என விசாரணை செய்தீர்கள்? என்பதற்கான பதிலையும் கூறவேண்டும். அல்ஜசீரா தொலைக்காட்சிக்கும் தாயார் இதனைக் கூறியுள்ளார்.

பிரபாகரனின் இறப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் அமைச்சர்களின் மாறுபட்ட கருத்துக்களானது பித்தலாட்டங்களும் பொய்பிரட்டுக்களுமே இருப்பதாகவே நாங்கள் உணருகின்றோம் – என்றார்.




# சோழர்கால சிவனாலயத்தின் சிவலிங்க பீடத்திற்கு அடிக்கல்!

(காரைதீவு சகா)

சோழர்காலத்தில் நிருமாணிக்கப்பட்டு தற்போது தூர்ந்துசிதைந்துகிடக்கின்ற மடத்தடி சிவன் ஆலய முன்றலில் சிவலிங்கம் நிறுவுவதற்கான பீடமொன்றுக்கு அடிக்கல்நடும் வைபவம் பௌர்ணமியன்று நடைபெற்றது.



கூடவே அருகிலுள்ள மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் புதிதாக அம்மன் அன்னதான மண்டபத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடுவிழாவும் நடைபெற்றது.

சிவனருள் பவுண்டேசன் ஆதரவில் ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம், மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபக இயக்குனர் மு.ஜெயபாலன்,சிவனருள் பவுண்டேஷன் மாவட்ட தலைவர் தென்கிழக்குபல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் பேராசிரியை அனுசியா சேனாதிராஜா, மாவட்டச்செயலாளர் கே.வாமதேவன்,பொருளாளர் ரி.ஜனார்த்தனன் ,காத்தான்குடிபிரதேசசெயலாளர் யு.உதயசிறிதர் ,முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராஜா ,ஆலய பரிபாலனசபைஆலோசகர்களான வி.ரி.சகாதேவராஜா ,வா.குணாளன். வ.ஜெயந்தன், மாவட்டகலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அடிக்கல் நட்டனர்.

அடிக்கல் நடப்பட்ட பீடத்தில் சிவனருள் பவுண்டேசன் அனுசரணையில் மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபகரும் இயக்குனருமான மு.ஜெயபாலனின் ஏற்பாட்டில் எதிர்வரும் சிவராத்திரியன்று சிவலிங்கம் பிரதிஸ்டை செய்துவைக்கப்படவிருக்கிறது.

இதேவேளை மடத்தடி மீனாட்சி அம்மன்ஆலயத்தில் விசேட பௌர்ணமி பூஜை இடம்பெற்றது. அட்டப்பளம் அறநெறி மாணவர்களின் விசேட பஜனை பேச்சு நற்சிந்தனை இடம்பெற்றன. தொடர்ந்து ஆலயபரிபாலனசபைஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தலில் ஆலயத் தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் அடியார்கள் சங்கமம் பௌர்ணமி ஒன்றுகூடலும் இடம்பெற்றது.கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் சிறப்புரை நிகழ்த்தினார். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட ஆன்மீக நூல்கள் அங்கு அறநெறி மாணவர்க்கும் பிரமுகர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டன.

பௌர்ணமி தினமாகையால் நேற்று முன்தினம் பெருந்தொகையான அம்மன் அடியார்களும் கலந்துகொண்டு பொங்கிப் படைத்து அன்னதானம்வழங்கி அம்மனை வழிப்பட்டனர்.

## கோழிப்பண்ணையைக் கூட தற்போது....

அரசாங்கத்தினால் கோழிப்பண்ணையைக் கூட சரியாக நடத்த முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் பேசிய அவர், ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்களை தண்டிக்க அரசாங்கம் தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார். 3 ஆண்டுகள் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் 6 வருடங்கள் கடந்தால் அது மறைக்கப்பட்டுவிடும் என்றும் அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

## சர்வதேச தாய்மொழி தின நிகழ்வில் பிரதமர்

தினமானது அமைதியை நிலைநாட்டுதல், பன்மொழி பயன்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் உலகம் முழுவதும் தாய்மொழிகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம்இ கல்வி அமைச்சுஇ ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் இலங்கை சாரணர் சங்கம் ஆகியன இணைந்து இவ்வருட சர்வதேச தாய்மொழி தினத்தை ஏற்பாடு செய்திருந்தன.

தாய்மொழியைப் பாதுகாப்பதற்காக உயிர் தியாகம் செய்தவர்களை நினைவுகூரும் வகையில், விழாவின் ஆரம்பத்தில் கௌரவ பிரதமர் உள்ளிட்ட அனைவரும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். 'தாய், தாய்மொழி, தாய்நாடு' என்பது இந்த ஆண்டு கொண்டாட்டத்தின் தொனிப்பொருளாகும். இந்த மூன்று விலைமதிப்பற்ற சொத்துக்களை பாதுகாப்பதற்கான நமது முயற்சிகளை புதுப்பிப்போம் என்பதே இந்த ஆண்டு கொண்டாட்டத்தின் முக்கிய செய்தியாகும்.

சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு 'தாய், தாய்மொழிஇ தாய்நாடு' என்ற தொனிப்பொருளில் மூன்று தொகுதிகளாக நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளில் வெற்றி பெற்ற 15 வெற்றியாளர்களுக்கு இதன்போது பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மூன்று மாணவர்களும் கௌரவ பிரதமரிடம் இருந்து பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

பெபிலியான ரஜ மஹா விகாராதிபதி வெல்லம்பிடியே சுமன தம்ம தேரர் உள்ளிட்ட மஹாசங்கத்தினரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இந்தியாஇ பங்களாதேஷ்இ ரஷ்யாஇ மாலைதீவு மற்றும் பிரான்ஸ் நாட்டின் கலாசார அம்சங்கள் மற்றும் சிங்களஇ தமிழ் பாடல்களின் மூலம் நிகழ்வு சிறப்பிக்கப் பட்டது.

குறித்த நிகழ்வில் கௌரவ அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன, இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தரெக் அரிஃபுல் இஸ்லாம் உள்ளிட்ட தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர், இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, உலக தொழிலாளர் அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான நிரந்தரப் பிரதிநிதி சிம்ரின் சின் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## அரசியல் உட்பூசல்கள் நாட்டுக்கு பயனளிக்காது

கொண்டதல்ல என பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் தனிநபர்களின் அரசியல் நலன்களுக்காக சில விடயங்களை செய்வதை தவிர்த்து நாட்டின் நலனுக்காக உழைக்க வேண்டிய தேவை இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அரசியல்வாதிகளுக்கு இடையில் முரண்பாடுகள் மாத்திரமன்றி அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுவதாக பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே கருத்து வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு அனைவரும் ஒன்றிணைந்து தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டுமென ரோஹன ஹெட்டியாராச்சி அழைப்பு விடுத்தார்.

## எரிபொருளின் விலை அதிகரிக்கும்?

விலையை அதிகரிக்க வேண்டும்.

இவ்விரண்டையும் செயற்படுத்தாவிடின் எரிபொருள் கொள்வனவிற்கு பாதிப்பு ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் மீதான வரி விலக்கு சலுகை வழங்கப்பட வேண்டும் என நிதியமைச்சிடம் கடந்த வாரம் உத்தியோகப்பூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளேன். இதுவரையில் சாதகமாக பதில் கிடைக்கப் பெறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விடுதலைப் புலிகளின் தலைவர் சிறந்த ...

இந்தக் கருத்து தொடர்பில் இறுதிப் போரில் இராணுவத் தளபதியாகப்

பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் கருத்துரைத்த அவர்,

பிரபாகரனின் சாவை வைத்து அன்று தொடக்கம் இன்று வரை சிலர் அரசியல் செய்து வருகின்றனர். இராணுவத்தினருடனான நேரடி மோதலிலேயே பிரபாகரன் உயிரிழந்தார் என்பது உண்மை. அவரின் வெற்றுடலையே இராணுவத்தினர் மீட்டனர். பிரபாகரன் ஒரு பயங்கரவாதக் குழுவின் தலைவர். எனினும், அவர் சிறந்த போர் வீரன். அதனால் அவர் மீது எனக்குத் தனிமரியாதை உண்டு. பிரபாகரனை உயிருடன் பிடிக்க வேண்டும் என இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் விரும்பின.

அந்த நாடுகள் இலங்கை அரசுக்கு அன்று அழுத்தமும் கொடுத்திருந்தன. எனினும், பிரபாகரன் எந்தத் தரப்பிடமும் சிக்காமல் இறுதி வரைப் போராடியே சாவடைந்தார் என்றார்.



வீரகேசரியின் 50 ஆண்டுகாலம் பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றிய பொன் விழாக் கண்ட வடமராட்சி எஸ். தில்லைநாதனுக்கு அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய பாராட்டு விழாவில் காலைக்கதிர் பிரதம ஆசிரியர் ந.வித்தியாதரன், யாழ். ஊடக அமையத்தின் ஆலோசகர் இதயாபரன், பத்திரிகையாளர் திருமதி சரஸ்வதி சுகிர்தசாஜ் தலைமை வகித்த வேணுகானன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிப்பதைப் படங்களில் காணலாம்.

# கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் ஆலய விவகாரம்: உப்புவெளிப் போலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி

**(எப்.முபாரக்)**

கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் ஆலய அறங்காவலர் சபை மற்றும் கன்னியா சிவன் ஆலய பூசை என்பனவற்றிற்கு எதிராக உப்புவெளிப் பொலிசார் விதித்து கடந்த 02.12.2020 தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று(21) திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

திருகோணமலை கன்னியா நிர்வாக சபையினரான க.துஷ்யந்தன், க. தேவகடாட்சம், கு.செந்தூரன் ஆகியோர் வழக்கறிஞர் செல்வி.சி.ஐஸ்வர்யா, திரு. நிரோசன் ஆகியோரின் மூலம் முன்னெடுத்த நகர்வுப் பிரேரணையினைப் பரிசீலித்த நீதிபதி அவர்கள் குறித்த வழக்கினைத் தள்ளுபடி செய்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த வழக்கு மற்றும் மனித உரிமை ஆணையகத்தின் விசாரணை தொல்பொருள் திணைக்களத்திற்கு எதிரான முறைப்பாடு கலாசாரத் திணைக்களத்தில் செய்யபட்ட முறைப்பாடு பிரதேச செயலகத்தில் செய்த முறைப்பாடு, மாவட்டச் செயலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு பிரதமர் செயலகத்திற்கு விடுத்த கோரிக்கை சனாதிபதிக்கு அனுப்பிய மனு எனக் கடிதங்களும், சந்திப்புகளும் அதிகமாகும்.

குறித்த வழக்கு தொடர்பாக நடைபெற்ற 8 வழக்கு அமர்வுகள், 6 தடவை பொலிஸ் முறைப்பாடுகள் என்பனவற்றின் பின் இந்த தீர்ப்பு வெளியாகியுள்ளது.

இப்பணிகளில் உறுதுணையாக இருந்த வழக்கறிஞர் சி.சுபாசினி அவர்கள், வழக்கறிஞர் திரு.தி.துஷ்யந்தன் அவர்கள், வழக்கறிஞர் செல்வி.சி.ஐஸ்வர்யா, திரு. நிரோசன் மற்றும் வழக்கறிஞர் ந.வரதன் ஆகியோருக்கும் கன்னியா சிவன் ஆலய பரிபாலன சபையினர் தமது நன்றியை தெரிவிக்கின்றனர்.

# இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு





**( வாஸ் கூஞ்ஞ)**

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் நடைபெற்ற நடப்பு வருட நிர்வாகத் தெரிவில் வீரகேசரியின் பிரதம செய்தி ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜனும் செயலாளராக கே.ஜெயந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும் ஞாயிற்றுக்கிழமை (20.02.2022) காலை 10மணியளவில் கொழும்பு தமிழ்ச் சங்க கலாவினோதன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் நடப்பு வருட புதிய தலைவராக எஸ்.ஸ்ரீகஜன் தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக கே.ஜெயந்திரனும் உப தலைவர்களாக லியோ நிரோஷ் தர்ஷனும் செல்வி தர்மினி பத்மநாதனும் உப செயலாளராக க.சிவசண்முகநாதனும் பொருலாளராக ப.விக்னேஸ்வரன் உப பொருளாளராக எல்.ஜி.வாஸ் கூஞ்ஞ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ் அமைப்பின் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக ஆர் சிவராஜா என்.அனந்த் பாலகிட்ணர் என்.ஜெயகாந்தன் வீ.பிரியதர்ஷன் ஆர்.சேதுராமன் கி.லக்ஸ்மன் சிசில் செல்வி பிரியங்கா சந்திரசேகரம் கே.ஹரேந்திரன் கே.பிரசன்னகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மாகாண ரீதியில் வடமாகாண இணைப்பாளராக கணபதி சர்வானந்தா கிழக்கு மாகாண இணைப்பாளராக எஸ்.சரவணன் மற்றும் மலையக இணைப்பாளராக சிவலிங்கம் சிவகுமாரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வெட்டிய மரம் விழுந்து ஒருவர் பலி



**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

தலவாக்கலை அட்டன் பிரதான வீதியில் லோகி தோட்ட பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலிருந்த 200 வருட பழமை வாய்ந்த ஆல மரமொன்றின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது அதன் கிளையொன்று உடைந்து வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததில் அதை செலுத்திய நபர் உயிரிழந்துள்ளார். தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்தவரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் ஆசிரியருமான வேலுசாமி மகேஸ்வரன் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் 21.2.2022 மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த நபர் தனது வீட்டிலிருந்து தலவாக்கலை நகருக்கு சென்றுக்கொண்டிருந்தபோது தலவாக்கலை லோகி பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் வெட்டிக்கொண்டிருந்த ஆலமரத்தின் கிளையொன்று உடைந்து பிரதான வீதியின் நடுவில் விழுந்தமையினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



விபத்து இடம்பெற்றபோது காயமடைந்த நபரை முச்சக்கரவண்டியில் லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்ததாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.சடலம் தற்போது லிந்துலை வைத்தியசாலை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது வீதியில் சென்ற முச்சக்கர வண்டியொன்றும் சேதமடைந்துள்ளது.வன திணைக்களத்தின் அனுமதியை பெற்றிருந்தபோதிலும் குறித்த ஆல மரத்தின் கிளைகளை வன திணைக்களத்தின் அனுமதியுடன் வெட்டியபோதும் உரிய பாதுகாப்பின்றி மரத்தின் கிளைகளை வெட்டியதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்து அட்டன் தலவாக்கலை பிரதான வீதியில் லோகி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் வீதியை மறித்து சாலை மறியலில் ஈடுப்பட்டனர். 200 வருடம் பழைமை வாய்ந்த மரத்தினை வெட்ட யார் அனுமதி கொடுத்தது.பிரதான வீதியில் 100 ற்கு கணக்கான வாகனங்கள் செல்லும்போது பிரதான வீதிக்கு அருகாமையில் இருக்கும் இந்த மரத்தின் கிளைகளை வெட்ட யார் அனுமதி கொடுத்தது. உரிய பாதுகாப்பு வழங்காமல் மரத்தினை வெட்டியதால் இன்று அப்பாவி உயிர் போய்விட்டதே போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இதனால் அட்டன் தலவாக்கலை பிரதான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை மற்றும் லிந்துலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# களுவாஞ்சிகுடி போதுச் சந்தைத் தொகுதியில் அமைந்திருந்த கடை ஒன்று எரிந்து நாசம்



**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைத் தொகுதியில் அமைந்துள்ள கடை ஒன்று திங்கட்கிழமை(21) மாலை திடீரென தீப்பிடித்ததில் கடையிலிருந்து பல பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது.

திங்கட்கிழமை மாலை தனது வியாபார நடவடிக்கைகளை முடித்துவிட்டு கடையை வழக்கமாக பூட்டுவதுபோல் பூட்டிவிட்டு கடை உரிமையாளர் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். பின்னர் மாலை 5.45 அளவில் குறித்த கடையினுள் இருந்து புகை வெளிவருவதை அயலிலிருந்தவர்கள் அவதானித்துள்ளனர். இவ்விடையம் குறித்து உரிய கடை உரிமையாளருக்கும் அயலவர்கள் தெரிவித்ததற்கு இணைங்க அவர் விரைந்து சென்று தனது கடையைத் திறந்தபோது கடையினுள் இருந்த அனைத்துப் பொருட்களும் தீப்பற்றிக் கொண்டிருந்ததை அவதானித்தனர்.

எனினும் அங்கிருந்த அயலவர்களின் உதவியுடன் ஏனைய கடைகளுக்குத் தீ பரவாமல் ஒருவாறு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அணைத்துள்ளனர். இச்சம்பவத்தால் குறித்த கடையிலிருந்து பிளாஸ்றிக், மற்றும் அலுமினியம் உள்ளிட்ட, பல பெறுமதியான பொருட்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. இத்தீவிபத்துச் சம்பவம் மின்னனொழுக்காக இருக்கலாம் என அயலவர்கள் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் குறித்து விரைந்து சென்று களுவாஞ்சிகுடி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். களுவாஞ்சிகுடி பொதுச் சந்தை தொகுதி மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குச் சொந்தமானது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்யக்கோரி கையெழுத்துவேட்டை



**(காரைதீவு நிருபர் சகா)**

பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்யக்கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்து போராட்டத்தின் ஓரங்கமாக ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

நேற்று காலை 10மணியளவில் காரைதீவு பொதுச்சந்தைக்கு முன்னால் கையெழுத்துவெட்டை இ.த.அ.கட்சி மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு தவிசாளருமான கி.ஜெயசிறில் தலைமையில் ஆரம்பமாகியது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்யக்கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்து போராட்டத்தின் ஓரங்கமாக ஞாயிற்றுக்கிழமை(20) அன்று அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

காரைதீவு பொதுச்சந்தை மற்றும் கல்முனை பகுதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்யக்கோரி குறித்த கையெழுத்து போராட்டமானது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி ஏற்பாட்டில் இடம்பெற்றன.



# மட்டக்களப்பு மாவட்டம் டெங்கு பரவலினால் சிவப்பு வலயமாக அடையாளம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜி.சுகுணன் தெரிவிப்பு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதன் காரமாக மட்டக்களப்பு மாவட்டம் சிவப்பு வலயமாக அடையாளப்படுத்தபட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜி.சுகுணன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் கடந்த ஆண்டு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட மாவட்டங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்ட இருப்பதாகவும் அதில் 2800 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்ததாகவும் அத்தோடு அதில் நான்கு போர் மரணத்தை தழுவியிருந்ததாகவும் சுகாதார



சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இவ்வாண்டின் மாசி மாதம் வரையான காலப்பகுதியில் 75 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இந்த டெங்கு நோயின் பரம்பலில் முக்கிய விடயமாக காணப்படுவது டெங்கு நுளம்பை அழித்தல் என்னும் விடையத்தில் நாங்கள் அனைவரும் விளங்கிக்கொள்ளுதல் அவசியமானதெனவும், அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு நகரப்பகுதியில் அதிக டொங்கு நோயாளர்களை இனங்கண்டிருப்பதால், முக்கியமாக நகரப்பகுதிகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் செயற்பாட்டை தாம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதனை மாவட்டத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதாயின் உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் கிராமிய சங்கங்களின் ஒத்துழைப்பு சுகாதார துறைக்கு இக்காலகட்டத்தில் மிகவும் அவசியமாக இருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன் இதன்போது தெரிவித்துள்ளார்.

## திருமலை உப்புவெளி சந்தியில் முதலாவது மரத்தளபாட விற்பனை நிலையம் திறந்து வைப்பு





(பைஷல் இஸ்மாயில்)

ஜனாதிபதியின் சுபீட்சத்துக்கு நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் வழிகாட்டுதலின் கீழ், கிழக்கு மாகாணத்திலுள்ள சுய தொழில் கை வினைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கும் பொருட்டு கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களம் பாரிய திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அதன் முதற்கட்டமாக, திருகோணமலை மாவட்ட உப்புவெளி சந்தியில் முதலாவது மரத்தளபாட விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்துகொண்டு குறித்த மரத்தளபாட விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துஷித பீ. வணிகசிங்க, முதலமைச்சின் செயலாளர் (திருமதி) கலாமதி பத்மராஜா, சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ.மன்சூர் உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், மாகாண ஆணையாளர்கள், கணக்காளர்கள் மற்றும் பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சம்மாந்துறையில் திண்மக் கழிவகற்றல் சேவையின் போது ஆவணங்களும், 40 ஆயிரம் ரூபாய் பணமும் உரிமையாளருடன் ஒப்படைப்பு

( நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறையில் திண்மக் கழிவகற்றல் சேவையின் போது 40ஆயிரம் ரூபாய் பணமும், தேசிய அடையாள அட்டை, சராதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை உள்ளிட்ட ஆவணங்களுடன் மனிபேஸ் கண்டடுக்கப்பட்டு உரிமையாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச சபை ஊழியர்களான எஸ்.கமலதாசன் (சாரதி), வீ.கண்ணன், கே.ரஞ்சித் குமார் ஆகியோர்கள் ரீ.சீ.லேன், ஈஸா வீதிகளில் திண்மக் கழிவகற்றல் மேற்கொண்ட வேளையில் இவை கண்டெடுக்கப்பட்டது. இதனை திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு பொறுப்பான தொழிநுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம்.முஸ்பாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதேவேளை அவ்வீதியினால் மனிபேஸ் தொலைந்து விட்டதாக



தேடி வந்த உரிமையாளரிடம் அது தொடர்பான ஆவணங்களை உறுதிப்படுதியதன் பின்னர் பிரதேச சபையில் வைத்து உரிய ஆவணங்களும், 40,000 ரூபாய் பணமும் ஒப்படைக்கப்பட்டது.

இதன் மூலம் சம்மாந்துறை பிரதேச சபைக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுத்தமைக்காக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் அவர்களினால் குறித்த ஊழியர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்ததுடன், இவ்ஊழியர்களுக்கு பாராட்டு நற்சான்றிதழ் வழங்குமாறு சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களிடம் பணிப்புரை வழங்கினார்.

இவ்வாறான பணம், நகை, பெறுமதியான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைத்த பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டெங்கு நோய்த் தோற்றற்ற நாடாக எமது நாடு திகழ்வேண்டும்!





(பைஷல் இஸ்மாயில்)

டெங்கு நுளம்பு பரவலைத் தடுக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்த்தின் விஷேட அறிவுருத்தல்களுக்கமைவாக கிழக்கு மாகாணம் முழுவதும் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு அங்கமாக, கிழக்கு மாகாண சபை வளாகத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் (திருமதி) கலாமதி பத்மராஜா தலைமையில் இச்சிரமாதானப் பணிகள் இடம்பெற்றது. இதில் முதலமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ், நிருவாக உத்தியோகத்தர் எஸ்.எம்.றியாஸ் உள்ளிட்ட முதலமைச்சின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பலர் இதில் ஈடுபட்டனர்.

இதன்போது முதலமைச்சின் செயலாளர் (திருமதி) கலாமதி பத்மராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

டெங்கு நோய்த் தொற்றற்ற ஒரு நாடாக எமது நாடு திகழ் வேண்டும் என்ற ஜனாதிபதின் சிநத்தனைக்கமைவாக, கிழக்கு மாகாண ஆளுநரின் விஷேட பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாணம் முழுவதும் இந்த சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு நுளம்பின் உருவாக்கத்தையும், அதன் பெருக்கத்தையும் இல்லாது செய்வதாக இருந்தால் நாம் இருக்கின்ற இடங்களை நாளாந்தம் துப்பரவு செய்து பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களை விட டெங்கு நுளம்புப் பரவல் வீதம் குறைவாக இருக்கின்றது. இதை 100 வீதம் இல்லாமல் செய்வதே எமது ஆளுநரினதும், எங்களினதும் நோக்காக இருக்கின்றது. அதற்காக சுகாதாரத்துறை பாரிய பங்களிப்புக்களையும், விழிப்புணர்வு செயற்பாடுகளையும் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது.

உயிர்கொல்லி நோயாக இருக்கின்ற டெங்கு நோய் பரவலை ஏற்படுத்தும் நுளம்புகளை இல்லாமல் செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே இதை பெற்றிகொள்ள முடியும் என்றார்.

## அபாயத்தை எதிர்நோக்கும் யானைகள்

(எப்.முபாரக்)

இலங்கையின்கலாச்சார, அடையாள இனமாக விளங்கும் இலங்கையின் யானைகள் அழிவடைந்த விலங்குகளின் பட்டியலில் சேர்க்கப்படுகின்ற அபாயத்தினை எதிர்நோக்கி வருகின்றன. இது தொடர்பில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் உட்பட்ட மக்களும் மிகுந்த பொறுப்புடன் செயற்படுவது அவசியம்.

இலங்கையில் 7379 யானைகள் உள்ளதாகவும் 5879 யானைகள் தேசிய வனங்களிலும், சரனாலயங்களிலும், 1500 வரையான யானைகள் காட்டில் காணப்படுவதாக 2011 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்போது கண்டறியப்பட்டது.

இலங்கையின் யானைகள், IU-CN (இயற்கையை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம்) இனால் 1986ம் ஆண்டில் இருந்து அழிந்துபோகும் அபாயமுள்ள விலங்குகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் இலங்கையில் யானைகள் வேட்டையாடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். 1989ம் ஆண்டில் சர்வதேச ரீதியில் யானைத்தந்த வியாபாரம் சட்டவிரோதமாக அறிவிக்கப்பட்டது. இலங்கையில் யானைகளை கொல்வது மரண தண்டனையைகூட பெற்றுக் கொடுக்கும். வனவிலங்கு சட்டத்தின் பிரிவுகள் 30, 31, 314, 3113, 12 என்பன மிருகங்கள் வேட்டையாடப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதாக கூறப்படுகின்றது. எனினும் வருடம்தோறும் 200க்கும் அதிகமான யானைகள் கொல்லப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஹபரண - திருகோணமலை பிரதான வீதியில் குட்டி யானை ஒன்றினை ஜீப் வண்டியின்



முகப்பு விளக்கினை பயன்படுத்தி துன்புறுத்திய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு 200000.00 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதேபோல் முல்லைத்தீவு - ஒதியமலை கிராமத்தில் மின்சார வேலியில் சிக்குண்டு காட்டு யானை உயிரிழந்த சம்பவத்தில் 46 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு 500000.00 ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். எனினும் பன்குளம் பகுதியில் யானைக்கு நடந்தது என்ன?

திருகோணமலை - பன்குளம் பகுதியில் 10 நாட்களுக்கு மேலாக யானை படும் அவலங்களையும் சமூக ஆர்வலர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினுடைய பொறுப்பு தொடர்பிலும் ஏனைய பல விடயங்கள் தொடர்பிலும் பல கேள்விகள் எழுந்துள்ளன.

1. யானைக்கு என்ன நேர்ந்தது?
2. யானையின் இந்த நிலைமைக்கு காரணமாணவர்கள் யார்?
3. ஏன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை?
4. பாதிக்கப்பட்ட யானைக்கான சிகிச்சை தொடர்பில் ஏன் தீவிரம் காட்டப்படவில்லை?
5. வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பொறுப்புதான் என்ன?
6. மக்களுக்கு இருக்கின்ற அக்கறை கூட அதிகாரிகளுக்கு இல்லாதுபோன காரணம் என்ன?
7. யானையின் மரணத்துக்கான திகதி குறிக்கப்பட்டுவிட்டதா?
8. யானை இறந்த பின்னர் இறப்புக்கான பொறுப்பினை யார் பொறுப்பேற்பது?
9. யானையின் இறப்புக்கானவர்கள் கைது செய்யப்படுவார்களா?
10. பொதுமக்களிடமிருந்து வன விலங்குகளையும், வன விலங்குகளிடமிருந்து பொதுமக்களையும் பாதுகாக்கும் என்ன பொறிமுறையினை அரசாங்கம் கையாள்கின்றது?

## ஹொக்கி லயன்ஸ் கழகத்திற்கு புதிய யேர்சி அறிமுகம்

(காரைதீவு சகா)

காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்திற்கு புதிய சீருடையை அருளானந்தம் சமூக அறக்கட்டளை நிதியம் ( அஸ்கோ) வழங்கியுள்ளது.

ஹொக்கி லயன்ஸ் கழகத்திற்கு எதிர்வரும் காலங்களில் அஸ்கோ எனப்படும் அருளானந்தம் சமூக அறக்கட்டளை நிதியம் அனுசரணை வழங்கவிருக்கிறது .

ஜேசி அறிமுக நிகழ்வு காரைதீவு விபுலானந்த விளையாட்டு மைதானத்தில் கழக தலைவர் த.லவன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக ஆலோசகர் காளான் வி.ரி. சகாதேவராஜா தி. உமா சங்கரன் மற்றும் அஸ்கோ அமைப்பின் சார்பில் அதன் பிரதிகளான எஸ். நந்தகுமார் எம். சுந்தரராஜன் கே. லோகேந்திரராஜா மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களான எல்.சுலக்சன் வி.பாஸ்கரன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் அஸ்கோ அனுசரனையுடன் புதிய ஜேர்சி வெளியிட்டு வைக்கப்பட்டது.



# பயங்கரவாதத் தடைச்சட்டம் எதிர்காலத்தில் மூவின மக்களையும் சுதந்திரமற்றவர்களாக மாற்றிவிடும்

## கல்முனை மாநகரசபை உறுப்பினர் எஸ்.ராஜன்

(சுமன்)

எமது வருங்கால சந்ததியின் எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரத்தை உரிமையுடன் அனுபவிப்பதற்கும், பயங்கரவாதி என்ற முத்திரை இல்லாமல் வாழ்வதற்கும் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் போராட்டத்திற்கு அனைத்து இன மக்களும் ஒன்றுபட வேண்டும். இல்லாவிடின் எதிர்காலத்தில் இச்சட்டம் மூவின மக்களையும் சுதந்திரமற்றவர்களாக மாற்றிவிடும் என கல்முனை மாநகரசபை உறுப்பினர் எஸ்.ராஜன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிபர் முன்னணியின் ஏற்பட்டில் கல்முனையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டமானது 1979ம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து எமது தமிழ் மக்கள் சொல்லொனாத் துயர்களை அனுபவித்து வருகின்றார்கள். எமது இளைஞர் யுவதிகள், ஒன்றுமறியா உறவுகள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் இச்சட்டத்தின் மூலம் சிறையிலிடப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, பயங்கரவாதிகள் என்ற பெயரிலே கைது செய்யப்படுகின்றார்கள்.

கடந்த ஆண்டு காலத்தில் முகநூல், மேடைப் பேச்சுக்கள் மற்றும் சுதந்திரமான கதையாடல்களின் போதெல்லாம் அதனைக் காரணமாகக் காட்டி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்களைக் கைது செய்து பல ஆண்டு காலங்களாகச் சிறையில் அடைத்து வைத்துள்ளார்கள்.




இலங்கை நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த காலம் தொட்டு தமிழ் மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கவே இல்லை. தமிழர்கள் எதுவித சுதந்திரமுமே இல்லாமல் வாழும் இந்த நாட்டிலே ஒரு சில தமிழர்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடி வருகின்றார்கள். இவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் தமிழ் மக்கள் பேசுவதற்கே சுதந்திரம் இல்லாமல் இருக்கும் போது, சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது எந்தவகையில் நியாயம்.

இவ்வாறான இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் எதிர்வருகின்ற காலத்தில் மூவின மக்களையும் சுதந்திரமற்றவர்களாக மாற்றிவிடும். இந்த நாட்டில் மூவின மக்களும் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் ஜனநாயகத்துடனும் வாழ வேண்டுமாக இருந்தால் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். உலகின் ஜனநாயக நாடுகளில் மக்கள் எவ்வாறு தங்கள் சுதந்திரத்தை அனுபவிக்கின்றார்களோ அதேபோன்று இலங்கையிலும் நிலைமை வர வேண்டும். எமது எதிர்கால சந்ததி பயங்கரவாதி என்ற முத்திரை குத்தப்படாமல் வாழ வேண்டுமாக இருந்தால் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்.

இவ்வாறான கொடூரமான சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வடக்கு கிழக்கு மற்றும் நாடு பூராகவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை தமிழரசு வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மற்றும் காரைதீவு ஆகிய பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான விடயங்களை சர்வதேச நாடுகளும், இந்த நாட்டின் ஜனாதிபதியும் கருத்திற்கொள்ள வேண்டும். எமது மக்களின் உரிமையை அனுபவிப்பதற்கு இடமளிக்க வேண்டும். எமக்கான உரிமையே எமது சுதந்திரமாகும். வருங்கால சந்ததி தங்களின் எழுத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரத்தை உரிமையுடன் அனுபவிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்கு இந்தச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு அனைத்து இன மக்களும் கட்சி வேறுபாடுகளைக் களைந்து கையெழுத்திட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று தெரிவித்தார்.

# அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு: பாதிக்கப்பட்டோருக்கு நீதி கோரி உயர் நீதிமன்றில் வழக்கு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

1997 ஆம் ஆண்டு முதல் 2021 வரை ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்கு தீர்வு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக இலங்கை கல்வி நிருவாக அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கச் செயலாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ஏ.எல்.முகம்மட் முக்தார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

1997 ஆம் ஆண்டு வெளியான பி.சி.பெரேரா சம்பள அறிக்கையின் மூலம் இழைக்கப்பட்ட சம்பள உயர்வு அநீதிக்கு நிவாரணமாக ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட தொடர் வேலை நிறுத்தங்கள் காரணமாக 2022 ஜனவரி முதல் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இச்சம்பள உயர்வு வழங்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டபோது 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 வரையான காலத்தில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இது அவர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் பாரிய அநீதியாகும். ஏனெனில் 199% ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடமையில் இருந்த அனைத்து அதிபர், ஆசிரியர்களும் இச்சம்பள முரண்பாட்டால் பாதிக்கப்பட்டனர். ஆகையினால் அவர்களுக்கும் இச்சமபள உயர்வு உரிமையானதாகும்.



அதிபர், ஆசிரியர்களுக்கு 2022 ஜனவரி முதல் அமுலாகியுள்ள சம்பள மாற்றமானது உண்மையில் சமபல உயர்வல்ல. மாறாக 199% ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சம்பள முரண்பாட்டினால் உருவான வாதிப்புக்கான தீர்வாகும். ஆனால் 31.12.2021 வரை கடமையில் இருந்த ஆசிரியருக்கு இவ்வதிகரிப்பு மறுக்கப்பட்டு, மறுநாள் 01.01.2022 அன்று கடமையில் இருப்போருக்கு அதிகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பும் ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது. இதனை அரசாங்கம் எவ்வாறு நியாயப்படுத்தும்?

ஆகையினால் இத்தீர்வில் உள்ளடக்கப்படாத அதிபர், ஆசிரியர்களுக்கு நீதி கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கிற்கு தமது சங்கம் பூரண ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

# கோதுமை மா வழங்கும் நிகழ்வு





(தலவாக்கலை பி.கேதீஸ்)

தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதி கோட்டாபே ராஜபக்ஷவின் வழிகாட்டலில் நிதியமைச்சு, வர்த்தக அமைச்சு, மற்றும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு ஆகிய அமைச்சுகள் ஒன்றிணைந்து பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தின் மானிய நலன்புரி திட்டத்தின் கீழ் சலுகை விலையில் கோதுமை மா வழங்கும் நிகழ்வின் அங்குரார்ப்பன நிகழ்வு வட்டகொடை மடக்கும்புற தோட்டத்தில் கூட்டுறவு சேவைகள்,சந்தைப்படுத்தல் ,அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தலைமையில் (20) இடம்பெற்றது.

இதன்போது இங்குள்ள 71 குடும்பங்களுக்கு தலா 15 கிலோ கோதுமா 80 ரூபாய் மானிய விலையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கூட்டுறவு சேவைகள்,சந்தைப்படுத்தல் ,அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன , நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன், நுவரெலியா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் அனுஷா சிவராஜா, கொட்டகலை,அக்கரப்பத்தனை, நோர்வூட்,மஸ்கெலியா, மற்றும் நோர்வூட் பிரதேச சபை தலைவர்கள், தலவாக்கலை லிந்துலை நகரசபை தலைவர் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் கலந்துக் கொண்டனர்.

# கல்முனை இருதயநாதர் ஆலயத்தில் இனங்களுக்கிடையில் சமாதானத்தை வலியுறுத்தி இரத்ததான முகாம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட எகெட் நிறுவனத்தோடு இணைந்து கல்முனை இருதயநாதர் ஆலயம் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான முகாம் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர்.இரா. முரளீஸ்வரனின் வழிகாட்டலுக்கு அமைய இரத்த வங்கி பிரிவின் வைத்திய அதிகாரிகள் தாதி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு இரத்த மாதிரிகளை சேகரித்து கொண்டனர்.

இனங்களுக்கிடையில் சமாதானம், அமைதி, ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று நோக்கோடு இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆண்கள் - பெண்கள் என கல்முனை வாழ் மக்கள் பலரும் இந்த இரத்ததான முகாமில் கலந்துகொண்டு இரத்தங்களை வழங்கினர்கள்.



## ஒலுவில் எஸ்.ஜலால்டீன் எழுதிய அந்தி பூத்த வைகறை

# கவிதை நூல் வெளியீட்டு விழா

(றியாஸ் ஆதம்)

ஒலுவில் எஸ்.ஜலால்டீன் எழுதிய அந்தி பூத்த வைகறை கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 2%ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள அல்-ஸகி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.



இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும், தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த்துறை முதன்மைப் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.யோகராசா மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி ஏ.எஸ். ஆனந்தன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ். எம்.ஜாபீர், சிறுவர் வைத்திய நிபுணர் டொக்டர் பீ.எம்.அர்ஷாத் அஹமட், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி றபீக்கா அமிர்டீன் உள்ளிட்ட பலர் விசேட அதிதிகளாகவும், கலந்து கொள்ளவுள்ளனர்.

கலாபூசணம் எஸ்.முத்துமீரான், கலாபூசணம் பாலமுனை பாறூக், எழுத்தாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ், மற்றும் எஸ்.எல்.மன்சூர், கவிஞர்களான சோலைக்கிளி, உமாவரதராஜன், எஸ்.அஹமட், டொக்டர் ஏ.எம்.ஜாபீர், அக்கரையூர் அப்துல் குத்தூஸ், கலாபூசணம் நாடகாசிரியர் எம்.ஐ.ரஊப் ஆகியோரும் இந்நிகழ்வில் இலக்கிய சிறப்பு அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிவராத்திரி விழாவுக்கு திருக்கேதீஸ்வரத்துக்கு வெளி பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதி; தடுப்பூசி அட்டை பரிசோதிக்கப்படும்

**(வாஸ் கூஞ்ஞ)**

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்ள நாட்டிலிருந்து வருகை தரும் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொவிட் தொற்று காரணமாக சுகாதார நடைமுறைகளை கவனத்தில் கொண்டு இம்முறை பாலாவி குளத்தில் பக்தர்கள் நீராட தடை விதிக்கப்பட்டுள்ளது. என இது தொடர்பான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

இவ் வருடம் மன்னார் மாவட்டத்தின் பாடல் தளமான திருக்கேதீஸ்வரத்தில் மகா சிவராத்திரியானது எதிர்வரும் முதலாம் திகதி (01.03.2022) நடைபெறுவதையிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இது தொடர்பான உரிய திணைக்களத் தலைவர்களுடனும் திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலகரும் திருக்கேதீஸ்வர இணைத் தலைவருமான எஸ்.எஸ்.இராமகிருஷணன் அவர்களின் பங்களிப்புடன் வெள்ளிக்கிழமை (18.02.2022) பிற்பகல் கூட்டம் நடைபெற்றது.





இவ் கூட்டத்தின்போது சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஊடகங்களுக்கு தெரிவித்தார். அதாவது இந்த வருடம் நாட்டின் சகல இடங்களிலிருந்தும் பக்தர்கள் இவ் சிவராத்திரி விழாவில் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் விழாவில் கலந்துகொள்ள வரும் பக்தர்கள் முழுமையான கொவிட் தடுப்பூசிகள் பெற்றிருக்க வேண்டும் எனவும் இதற்கு ஆதாரமாக பக்தர்கள் அதற்கான அட்டையை அல்லது தங்கள் கையடக்க தொலைபேசியில் அவ் அட்டையை பதிவு செய்து கொண்டுவரப்பட வேண்டும்.

இவைகள் திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயிலில் வைத்து கடுமையான முறையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டே ஆலய வளாகத்துக்குள் அனுமதிக்கப்படுவர்.

மேலும் அங்கு வருகை தரும் ஒவ்வொரு பக்தர்களும் ஏனையோரும் மிகவும் கண்டிப்பான முறையில் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதற்கான சகல ஒழுங்குகளும் சுகாதார சேவைகள் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

உணவு வியாபார ஸ்தாபனங்கள் அமைக்கப்படும். அவ் ஸ்தாபனத்திலிருந்து அமர்ந்திருந்து உணவு உண்ண முடியாது. அவைகளை பார்சல் மூலமாக எடுத்துச் செல்வதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் இம்முறை சுகாதார நடைமுறையை கவனத்தில் கொண்டு வழமை போன்று அல்லாது பாலாவி குளத்தில் இறங்கி நீராட முடியாது. இருந்தும் பக்தர்கள் அந்த பாலாவி நீரை பெறுவதற்கு அங்கு நியமிக்கப்பட்டிருக்கும் தொண்டர்கள் மூலம் பாலாவி குளத்திலிருந்து நீரை பெற்றுக் கொள்ள வழி சமைக்கப்பட்டுள்ளது.

இவ் சிவராத்திரி நிகழ்வை பக்தர்கள் தங்கள் இடங்களிலிருந்து பார்வையிடுவதற்காக நேரடி ஒலிபரப்பு இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

பக்தர்களின் நலன் கருதி போக்குவரத்து சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பக்தர்கள் அதற்கேற்றவாறு நடந்து கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளனர்.

# திருமலை மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கடமைகளை பொறுப்பேற்பு



**(எப்.முபாரக் )**

திருகோணமலை மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய சமன் தர்சன பாண்டிகோராள கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கருவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு போக பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அதனோடு இணைந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக கடந்த 18ம் திகதி ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டார்.

திங்கட்கிழமை சமய ஆசீர்வாதங்களுக்கு மத்தியில் தம் கடமைகளை கொழும்பு சுகுருபாயவில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சில் சுபநேரத்தில் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சின் அதிகாரிகள், திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், திருகோணமலை மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், மாவட்ட செயலக நிர்வாக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே. எஸ்.குருகுலசூரிய, சக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# போத்துவில் பிரதேசத்தில் கோரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னேடுப்பு





**(றியாஸ் ஆதம்)**

பொத்துவில் பிரதேசத்தில் கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.யூ.அப்துல் சமட்டின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொத்துவில் ஆதார வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அல்-ஹுதா வித்தியாலயம் ஆகிய தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் நேற்று (21) தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கும், பூஸ்டர்தடுப்பூசியினை பெற்றுக்கொள்வோருக்குமே குறித்த நிலையங்களில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். றஜாப் உள்ளிட்ட குழுவினர் பார்வையிடுவதனைப் படத்தில் காணலாம்

# கிழக்கு சுகாதார அமைச்சின் புதிய செயலாளருக்கு கல்முனை சுகாதார பணிமனையில் வரவேற்பு





**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஜே.ஜே.முரளிதரனை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வும் சுகாதார நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை மீளாய்வு செய்யும் கூட்டமும் திங்கட்கிழமை (21) கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது மாகாண சுகாதார அமைச்சின் புதிய செயலாளர், நினைவுச் சின்னங்கள் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் அண்மையில் வெளியிடப்பட்ட அரண் காலாண்டு சஞ்சிகையும் அவருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான பிரிவு மற்றும் சுகாதார தகவல் ஊடகப் பிரிவு என்பன மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.எம்.வாஜித், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர் உட்பட வைத்திய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# திருக்கோவிலில் 60 பேருக்கு காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு





**( காரைதீவு சகா)**

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட காணிஆவணங்கள் இல்லாமல் குடியிருக்கும் மற்றும் பயிர் செய்யும் பொதுமக்களுக்கான காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வானது பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில்யில் நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமாகிய டபிள்யூ.டி.வீரசிங்க கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. அனோஜா, நிருவாக உத்தியோகத்தர் எஸ்.மோகனராஜா, கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் ரி.கந்தசாமி, சிரேஸ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் ஆர்.சசீந்திரன், காணி உத்தியோகத்தர்களாகிய பி.கோவிந்தசாமி, திருமதி.ரி.லோஜினி, என்.நந்தகுமார், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஆர்.ஜெகதீஸ்வரன், திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் கே. பரமானந்தம், சமுக சூழல் பாதுகாப்பு உத்தியோத்தர் எஸ்.பி..சீலன், ஆகியோரால் உத்தரவுப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 40பேருக்கு அளிப்புக்களும் 20 பேருக்கு உத்தரவுப்பத்திரங்களுமாக 60 பயனாளிகளுக்கு காணி ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் திருக்கோவில் பிரதேச செயலகமானது கடந்த 2020ஆண்டு 800க்கு மேற்பட்ட காணி அளிப்பு பத்திரம் தயாரித்து கிழக்கு மாகாணத்திலே முதலாம் இடத்தினை பெற்றுள்ளமை இதில் மேலும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும் மேலும் இவ் வெற்றி திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சியால் கிடைக்க பெற்ற முதலிடமாகும் என்பன குறிப்பிடத்தக்கது

# மட்டக்களப்பு வைத்தியசாலையின் குருதி தட்டுப்பாட்டை குறைக்க இரத்தானம்

**(ந.குகதர்சன்)**

ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள சமூக விழிப்புணர்வு ஒன்றியம், கல்குடா டைவர்ஸ், நியாஸ் ஹாஜியார் பவுண்டேசன் ஆகிய அமைப்புக்களின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் ஓட்டமாவடி முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாயலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.டீ.டீ.நிலங்க, வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார, ஓட்டமாவடி வர்த்தக சங்க தலைவர் ஏ.ஜி.நியாஸ் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர் எஸ்.விருஷ் தலைமையிலான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இரத்த தானத்தினை திறம்பட மேற்கொண்டனர்.

இதில் ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள பெரும்பாலான மக்கள் கலந்து கொண்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை ஓளரவு நிவர்த்தி செய்யும் வகையில் இரத்தானம் வழங்கி வைத்தனர்.



# பயங்கரவாத தடைச் சட்டமே இந்த மண்ணில் தொண்ணூராயிரம் விதவைகள் உருவாகக் காரணம்

## சிறிதரன் எம்.பி காட்டம்

(த.சுபேசன்)

பயங்கரவாத தடைச் சட்டமே இந்த மண்ணில் தொண்ணூராயிரம் விதவைகள் உருவாகக் காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார். 19/02 சனிக்கிழமை விழுது சமூக மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெற்ற ''நீதிக்கான எங்களின் குரல்'' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

அம்பிகா சற்குணநாதன் சில உரிமைகள் தொடர்பில், தமிழர்களுடைய வாழ்வியல் தொடர்பில் எம்மோடு இணைந்து குரல் கொடுத்த காரணத்திற்காக இன்று இலங்கை அரசால் அவர் விமர்சிக்கப்படுகின்றார். அரசாங்கம் ஒரு தனி நபருக்காக - ஒரு பெண்ணிற்கு எதிராக அறிக்கை விடும் அளவிற்கு இலங்கை மாறி விட்டது. இது ஒரு நெருக்கடியான காலத்திற்குள் நாம் வாழ்ந்து வருகிறோம் என்பதனை பறைசாற்றி நிற்கிறது.

இலங்கையின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய சரிவு ஏற்பட்டுள்ளது. மின்சாரத் தடை, குடும்பப் பெண்கள் எரிவாயு உள்ளிட்ட பொருட்கள் வாங்க கியூவில் நிற்கும் நிலை உள்ளிட்ட பல நெருக்கடிகள் இலங்கையில் உள்ளன. சிங்கள மக்கள் இப்போது தான் அதை உணர்கிறார்கள். நாங்கள் முப்பது ஆண்டுகளாக இதனை எல்லாம் அனுபவித்தவர்கள். ஒரு சவர்காரத்தை, எரிபொருளை கண் முன் காணாத நாட்களில் வாழ்ந்தவர்கள் நாங்கள்.



இங்குள்ள மக்களால் வாழ்வாதாரம் மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக என்னிடம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2015 -2019 காலப்பகுதியில் பல வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுத்திருந்தோம். கிராமங்களில் சிறிய கைத்தொழில் நிலையங்களை உருவாக்கி மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க வழிவகுத்திருந்தோம். தற்போதும் பல கோரிக்கைகள், கருத்திட்டங்களை முன்வைத்துள்ளோம்.

அத்துடன் மணல் அகழ்வு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பரவலாக இடம்பெறுகிறது. இங்கிருந்து தென் பகுதிக்கு மணல் கொண்டு செல்லப்படுகிறது. வேலியே பயிரை மேய்வது போன்று சம்பந்தப்பட்ட தரப்பு மணல் கடத்தலுக்கு உறுதுணையாக செயற்படுகின்றனர். அவர்களுடைய வாகனங்களும் மணல் அகழ்வில் பங்காளர்களாக ஈடுபடுத்தப்படுகிறது. அதன் காரணமாகவே மணல் அகழ்வை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் இதனை இப்படியே விட்டுவிட முடியாது. சட்ட ரீதியாக இவ்விடயத்தை அணுக முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கௌதாரி முனை மண்ணினை சில அரசியல் பிரதிநிதிகள் கொள்ளையிட முயற்சித்த போது கிளிநொச்சி நீதிமன்றத்தில் சுமந்திரன் அவர்கள் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒன்றரை வருட காலமாக அங்கிருந்து ஒரு லோட் மணலை கூட ஏற்ற முடியாத அளவிற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களிலும் இவ்வாறு சட்ட அணுகல் மூலம் மணல் அகழ்வை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# சிறுபான்மை மக்களும் அவர்களது அரசியல் சூழலும் பற்றிய செயலமர்வு



(றாசிக் நபாயிஸ், மருதமுனை நிருபர்)

சிறுபான்மை மக்களும் அவர்களது தற்கால அரசியல் சூழலும் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயலமர்வு 2022.02.19 (சனிக்கிழமை) கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர் ஏ.மதன் தலைமையில் இடம் பெற்றது.

சிறுபான்மை மக்களின் அரசியல் பற்றிய அரசியல்சார் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் இச்செயலமர்வு ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்றதுடன் இரண்டாவது செயலமர்வானது அம்பாறையில் இடம் பெற்றது.

இச்செயலமர்வின் பிரதான வளவாளராக அரசியல் ஆய்வாளர் ஏ.யதிந்திரா கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார். இதன் போது 13வது திருத்தச் சட்டமும் மாகாண சபையும், இலங்கையின் சமாதான முன்னெடுப்பு, சமாதானத்திற்கான மேற்குலக நாடுகளின் தலையீடுகள், இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள், பேரவையின் கட்டமைப்பு, சர்வதேச நீதி பொறிமுறை என்றால் என்ன? அது எந்தளவிற்கு செல்வாக்குமிக்கது, நீதியை உறுதிப்படுத்துவதற்கான உலக ஏற்பாடு, 72 மற்றும் 78ஆம் ஆண்டு அரசியலமைப்பு யாப்பில் சிறுபான்மையினரின் நிலை, பொறுப்பு கூறல் தொடர்பான சர்வதேச அழுத்தமும் அதன் பலவீனங்களும் அதனுடன தீர்வு போன்ற பல தலைப்புகளில் தனது கருத்துக்களை வழங்கினார்.

இச்செயலமர்வில் (ஏ.எச்.ஆர்.சி) நிறுவனத்தின் செயற்றிட்ட முகாமையாளர் என்.அஞ்சலி தேவி, திட்ட முகாமையாளர் எஸ்.சுதர்சினி, திட்ட இணைப்பாளர்கள் பி.ஜெகதீஸ், எஸ்.அனுஜா, கணக்காளர் ஆர்.பிரியாளினி, பிரதி கணக்காளர் சி.எஸ்.ஏன்ஜல் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிவில் செயற்பாட்டாளர்கள், அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள், பெண்கள், அரச உத்தியோகத்தர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டார்கள்.

# காத்தான்குடியில் ஆங்கிலப் பாட ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட English Festival Ceremony







(பாறுக் ஷிஹான்)

மட்டக்களப்பு மத்தி காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலய ஆங்கிலப் பாட ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட English Festival Ceremony பாடசாலையின் அதிபர் எஸ்.எல். அப்துல் கபூரின் தலைமையில் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். எம். எம் .எஸ். உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார். மேலும் கௌரவ அதிதிகளாக ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம் மர்சூக் வரலாறு பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எம். ஹக்கீம் உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் விசேட அதிதிகளாக காத்தான்குடி மீரா ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் மௌலவி எம்.ஐ ஆதம்லெப்பை பலாஹி மற்றும் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.எஸ்.எம் ஸாபித்தும் கலந்து கொண்டிருந்ததுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர் உட்பட பெற்றோர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ் English Festival Ceremony யில் மாணவ, மாணவிகளின் ஆங்கில மொழியிலான கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் English Exhibition, English Activity Room, அதேபோன்று பாரம்பரிய உணவு முறைகளைக் கொண்ட English Food Festival என்பன திறந்து வைக்கப்பட்டமை இந்நிகழ்வின் மேலதிக சிறப்பம்சமாகும்.

# மாவடிவேம்பில் சௌபாக்கியா உற்பத்தி கிராமத்தை திறந்துவைத்தார் வியாழேந்திரன்


(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவடிவேம்பு கிராம உத்தியோகத்தர் பிரிவானது சௌபாக்கியா உற்பத்தி கிராம திட்டத்தின் கீழ் பிரம்பு சார் உற்பத்தி கிராமாக பிரதேச செயலகத்தினால் தெரிவுசெய்யப்பட்டு 0.9 மில்லின் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட பிரம்பு உற்பத்திக்கான பொதுக்கட்டடிடம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அவர்களினால் நேற்று (21) திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட 45 பிரம்பு கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டி மற்றும் பிரம்பு உற்பத்திகான பொருட்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன.

செங்கலடி பிரதே செயலாளர் கே.தனபாலசுந்தரம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

இத்திட்டத்திற்காக லிப்ட் தன்னார்வ தொண்டு நிறுவனம் பாரிய பங்காற்றியிருந்ததுடன், இந் நிகழ்வில் லிப்ட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி.ஜானு முரளிதரன் கலந்துகொண்டிருந்ததுடன் பொது மக்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.









# சிந்திக்க வைக்கும் பயிற்சி நெறி

(ரக்ஸனா)

இளைஞர் யுவதிகளான இளந்தலைவர்களுக்கு முரண்பாட்டு நிலைமாற்றத்துக்கான பன்மைத்துவ செயற்பாடு எனும் பயிற்சி நெறி மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தனியார் விடுதியில் திங்கள்கிழமை 21.02.2022 இடம்பெற்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஆர். மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிங்கள தமிழ் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த வேறுபட்ட இளைஞர் அமைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 40 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர். இனவாத அடிப்படையிலான வன்முறைகளைத் தவிர்த்தல், வெறுப்புப் பேச்சு, அஹிம்சை வழிச் செயற்பாடுகள் உள்ளிட்ட தொனிப் பொருள்களில் விளக்கவுரைகளும் செயன்முறைப் பயிற்சிகளும் இங்கு இடம்பெற்றன. பயிற்சி நெறியில் வளவாளர்களாக பி. பெனிகஸ் மற்றும் ரீ. சில்வயன் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

பழமை வாதத்தையும், வன்முறை சார்ந்த மனப்பாங்குகளையும் தவிர்த்துக் கொண்டு புதிய போக்கில் இயல்பான வாழ்க்கை முறையினூடாக சமாதான சகவாழ்வைக் கட்டியெழுப்புவதன் அவசியம் இந்தப் பயிற்சி நெறியினூடாக வலியுறுத்தப்பட்டது. பயிற்சி நெறியில் பங்குபற்றிய தமிழ் முஸ்லிம் சிங்கள சமூகங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் முற்றிலும் சமாதான சகவாழ்வுக்கான புதிய போக்கில் தமது சிந்தனைக் கருத்துக்களை வெளிப்படுத்தியதாக பயிற்சியளித்த வளவாளர்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதக் குழு உதவி இணைப்பாளர் எம்.ஐ. அப்துல்ஹமீட் உட்பட இளைஞர் யுவதிகளின் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

# பழிவாங்கும் சட்டமாக மாறியுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம்

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டமானது 1979 இல் 48 ஆம் இலக்கச் சட்டமாக 6 மாதங்களுக்கான தற்காலிக மான ஏற்பாடாகக் கொண்டு வரப்பட்டது. பின்னர் அது 1983 இல் நிரந்தர சட்டமாக்கப்பட்டது. இந்தச் சட்டமானது ஜே.ஆர். ஜயவர்தனா ஜனாதிபதியாக இருந்த போது கொண்டு வரப்பட்டதாகும். தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்படாததால் 30 ஆண்டுகள் தமிழரசுக் கட்சியாக,தமிழர் விடுதலைக் கூட்டணியாகச் செயற்பட்டு தமிழர்களுக்கான அகிம்சைப் போராட்டம் நடாத்தப்பட்டது.அந்தப் போராட்டத்தினை ஆட்சிசெய்த அரசாங்கங்கள் அசட்டை செய்து அடக்குமுறை,அராஜகங்கள் புரிந்ததால் அப்போராட்டம் 1976 களின் பின்னர் ஆயுதப் போராட்டமாகியது.அதன் போதும் தீர்வை முன்வைக்காமல் அந்த விடுதலைப் போராளிகளை மட்டுமல்லாமல் அப்பாவித் தமிழர்களையும் அடக்குவதற்காக, அழிப்புகள் செய்வதற்காக மனித குலத்திற்கு எதிரான பயங்கரவாத தடைச்சட்டம் என்னும் பயங்கரச்சட்டம் கொண்டு தரப்பட்டது.

இந்த சட்டம் அரசியல் யாப்புக்கே முரணானதாக அமைந்தது.மேலும் இந்த சட்டம் போராளிகளை மட்டுமல்லாமல் அப்பாவித் தமிழர்களையும் பழிதீர்த்தது. அதாவது தமிழர்களைக் கைது செய்ததன் பின்னர் பயங்கரமான சித்திரவதைகளைச் செய்து குற்ற ஒப்புதல் பெற்று அதனைச் சாட்சியமாக வைத்து மரண தண்டனை,ஆயுட்கால சிறைத்தண்டனை,100 ஆண்டுகள் 200 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனைகள் வழங்குவதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டம் வழிகோலியது.இந்தப் பயங்கரவாத தடைச்சட்டம் அப்பாவித் தமிழர்களையும் சித்திரவதைகள் மூலமாகக் குற்றவாளிகளாக்கித் தண்டித்ததால்,இளைஞர்கள் யுவதிகள் பலர்தாமாகமே விடுதலைப் போராட்டத்தில் குதிப்பதற்கு வழிசமைந்தது.மேலும் பயங்கரவாதத் தடைசட்டம் குற்றவாளிகள் கணிசமானவரை உருவாக்கிய சட்டமாக மாறியது.

மறுபுறத்தில் படையினர் பொலிசார் பயங்கரமான சித்திரவதைகளை மூடிய சிறைகளில் செய்வதற்கும் கொல்லப்பட்டால் தப்பியோட முயன்றபோது சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற வாய்பாட்டைக் கூறித்தப்புவதற்கும் வழியேற்படுத்தப்பட்டது.அத்தோடு படையினர் பொலிசார் பற்றிக் கெட்ட பெயர்களை உருவாக்குவதற்கும் இப்பயங்கரச்சட்டம் வழிகோலியது.மேலும் அரசு சொல்லுகின்ற குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு இந்த சட்டம் வழிகோலியது.சனநாயகத்திற்குள் சர்வாதிகாரத்தினைப் புகுத்துவதற்கும் பயங்கரவாதத்தடைச்சட்டம் வழிவகுத்தது.அதே



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு




வேளை ஆட்சியாளர்கள்தமது தேவைக்கு ஏற்ப எதிரானவர்களைப் பழிவாங்குவதற்கு இந்தச் சட்டம் உதவியுள்ளது. தமது அரசியல் எதிரிகளை வேட்டையாடுவதற்கு இந்த சட்டம் வாய்ப்பளித்துள்ளது. வழக்குகள் தாக்கல் செய்யாமல் 10 ஆண்டுகளுக்கு ம் மேல் கைதிகளைத் தடுத்து வைப்பதற்கும் சித்திரவதைகள் செய்வதற்கும் இந்த சட்டம் உதவுகின்றது. இன்று யுத்தம் மௌனிக்கப்பட்டு 13 ஆண்டுகள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உள்நாட்டுப்போர் இல்லாதபோதும் தமிழ்க் கைதிகளைப் பழிவாங்கக் கூடிய விதத்தில் இந்த சட்டம் பாய்ச்சப்படுகிறது. விடுதலைப் புலிகளின் தலைவரின் படம் கையடக்கத் தொலைபேசியில் இருந்தது என்பதற்காக விசாரணைகள் இன்றி பல இளைஞர்கள் சிறையில் மாதங்கள்,வருடங்கள் கடந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தினை விமர்சிப்பவர்கள், ஆர்ப்பாட்டம் செய்கின்றவர்கள் போன்றவர்களை ஆளும் கட்சியிலுள்ளவர்கள் போட்டுக் கொடுத்தால்,அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்படுகின்றார்கள்.அதாவது ஆளும்கட்சி உறுப்பினர்கள், மந்திரிகள் விமர்சனம் இல்லாமல் அரசியல் செய்வதற்காக பலர் சிறைக்குள் தள்ளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.எதிர்ப்புகள் விமர்சனம் இல்லாத அரசியல் சனநாயா அரசியலல்ல.அது சர்வாதிகார அரசியல் என்பதை ஆட்சியாளர்கள் அறியாமல் இருக்க முடியாது.


ஊடகவியலாளர்கள்,சமூக செயற்பாட்டாளர்களை மிரட்டும் செயற்பாடுகள்,கைது செய்யும் செயற்பாடுகள் தொடர்கின்றன. காணாமல் ஆக்கியவர்களுக்கே இந்த ஆட்சியாளர்களால் பொறுப்புக் கூற முடியவில்லை.அதற்குள் மேலும் வன்மமான செயல்களைப் புரிவதென்பது பகுத்தறிவாத செயலாக இருக்க முடியாது.மட்டக்களப்பில் ஊடகவியலாளர் கோகுலன்,தியேட்டர் மோகன் இன்னும் பலர் அரசியல் நோக்கத்திற்காகப் பிணைகளின்றி ஓராண்டுக்கு மேலாக சிறையில் வழக்குகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. சிலரை சிறையில் அடைப்பதன் மூலமாகவும், அடக்குவதன் மூலமாகவும் சிறைக்கு வெளியிலுள்ள பலருக்கு அச்சுறுத்தல் விடப்படுகிறது.தெற்கில் சிங்கள் ஊடகவியலாளர் சமுதிதவின் வீடு வெள்ளைவான் கும்பலால் தாக்கப்பட்டுள்ளது.குற்றவாளிகள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.சிங்களசகோதர சமூக செயற்பாட்டாளர் மாலக்க உயிர்த்த ஞாயிறுக் தாக்குதல் பற்றி அவரறித்த உண்மைகளைப் பேசியதற்காக கைது செய்யப்பட்டு அழுத்தங்கள் காரணமாக பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.முன்னாள் ஆளுனர் அசாத்சாலி அரசு பற்றி விமர்சனக் கருத்துகளை முன்வைத்தமைக்காக பல மாதங்கள் சிறையில் தள்ளப்பட்டு குற்றமற்றவர் என்றவகையில் விடுவிக்கப்பட்டுள்ளர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத்பதியுதீன் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னான்டோ கைது செய்யப்படுவதற்கான அச்சுறுத்தலை எதிர்நோக்கினார்.இவ்வாறு எதிர்க்கட்சியினர் அவர்களது ஆதரவாளர்களை வறுத்தெடுக்கும் செயற்பாடுகள் பயங்கரமான சட்டம் மூலமாகத் தொடர்கின்றன. பயங்கரவாதத்தடைச்சட்டம், இருபதாவது யாப்புத்திருத்தம் ஆட்சியாளர்களுக்கு இனிப்பாக இருக்க எதிர்க்கட்சியினர் அவர்களது ஆதரவாளர்களுக்கு கசப்பாகப் பிரயோகிக்கப்படுகின்றன. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மனிதவுரிமை ஆணைக் குழுவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை முழுமையாக அகற்றக்கோரியுள்ளது.

இதன் பின்னரும் ஆட்சியாளர்க்கு அச்சட்டம் தேவையென்றால் சனநாயகம் சர்வாதிகாரத்தை நோக்கி வேகமாநகர்கின்றது என்பதுதான் உண்மை, இதற்கான விளைவுகளை ஐ.நா.மனிதவுரிமைப் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடரில் வழங்க வேண்டும் என்று ஜனநாயகத்தை நேசிக்கும் மக்கள் விரும்புகின்றார்கள். ஊடக சுதந்திரம் இருந்தால்தான் இந்த நாடு ஓரளவுக்காவது சனாயகத்தினைப்பேணுகின்றது என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளும்,இல்லாவிட்டால் மியன்மார் வழியில்தான் நாடு பயணிக்க விரும்புகிறது என்பது வெளிப்படையாகும்.

எனவே பயங்கரவாதத் தடைச்சட்டம் என்னும் சர்வாதிகாரத்திற்கான பயங்கரமான சட்டத்தை அகற்றி நாட்டின் ஜனநாயக அடையாளத்தை இந்த ஆட்சியாளர்கள் மேற்கொண்டால் நாட்டுக்கும் மக்களும்க்கும் ஆட்சியாளர்க்கும் நன்மை அளிக்கும்.ஈராண்டுகள் கெடுபிடிகளை மக்கள் தாண்டி விட்டார்கள் இன்னும் மூன்றாண்டுகளை அவர்கள் கடக்க வேண்டியுள்ளது.விடாக்கண்டர்கள் கொடாக்கண்டர்களால் நாட்டில் பிரச்சினைகளை அதிகரிக்க முடியுமேயொழிய இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. அதுவே நிதர்சனமாகியுள்ளது.பிழைப்பவாதத் தமிழ் அரசியல்வாதிகள் ஆட்சியாளர்களுடன் ஒட்டினால்தான் உழைக்கலாம் பிழைக்கலாம் என்றவகையில் அவர்கள்தமிழ்களை விற்றாவது பிழைக்க முற்பட்டுள்ளார்கள்.அவர்கள் பச்சை நீல சிவப்பர்களாக மாறி சட்டவிரோதமாக உழைத்து அதனை மூலதனமாக்கிப் பிழைத்து விடுவார்கள்.

**“ஊடகவியலாளர்கள்,சமூக செயற்பாட்டாளர்களை மிரட்டும் செயற்பாடுகள்,கைது செய்யும் செயற்பாடுகள் தொடர்கின்றன. காணாமல் ஆக்கியவர்களுக்கே இந்த ஆட்சியாளர்களால் பொறுப்புக் கூற முடியவில்லை.அதற்குள் மேலும் வன்மமான செயல்களைப் புரிவதென்பது பகுத்தறிவாத செயலாக இருக்க முடியாது.மட்டக்களப்பில் ஊடகவியலாளர் கோகுலன், தியேட்டர் மோகன் இன்னும் பலர் அரசியல் நோக்கத்திற்காகப் பிணைகளின்றி ஓராண்டுக்கு மேலாக சிறையில் வழக்குகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. சிலரை சிறையில் அடைப்பதன் மூலமாகவும், அடக்குவதன் மூலமாகவும் சிறைக்கு வெளியிலுள்ள பலருக்கு அச்சுறுத்தல் விடப்படுகிறது.தெற்கில் சிங்கள் ஊடகவியலாளர் சமுதிதவின் வீடு வெள்ளைவான் கும்பலால் தாக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.சிங்கள சகோதர சமூக செயற்பாட்டாளர் மாலக்க உயிர்த்த ஞாயிறுக் தாக்குதல் பற்றி அவரறித்த உண்மைகளைப் பேசியதற்காக கைது செய்யப்பட்டு அழுத்தங்கள் காரணமாக பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். முன்னாள் ஆளுனர் அசாத்சாலி அரசு பற்றி விமர்சனக் கருத்துகளை முன்வைத்தமைக்காக பல மாதங்கள் சிறையில் தள்ளப்பட்டு குற்றமற்றவர் என்றவகையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.”**




# பெண்கள் கருவுற்ற காலங்களில் உடலில் நச்சுநிலை கூடுவதால் இரத்த அழுத்தம் கூடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம்

## நிந்தவூர் ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியர் ஏ.சி.டில்சாட் கூறுகிறார்

### குருதி அனல்வாதம் என்றால் என்ன?

இரத்தக்கொதிப்பை தமிழில் குருதி அனல்வாதமென்றும், ஆங்கிலத்தில் ஹைபெர்டென்சன் (Hypertension)என்று அழைக்கின்றனர். மேலும், இரத்தச்சூடு, இரத்த அழுத்தம், இரத்த மிகுதி, இரத்த அமுக்கம், இரத்தப் பெருக்கம், இரத்தாதிக்கம், நரம்பிறுக்கம், நாடி இறக்கம், போன்ற பெயர்களாலும் அழைக்கப்படும். அதாவது, காரணம் கண்டுபிடிக்க முடியாத மிகையான இரத்தழுத்தம் என்பது இதன் பொருளாகும். உணர்ச்சிகள் கட்டுப்பாடற்று கொந்தளிப்பு அடையும்போது இரத்த ஓட்டம் தடைப்படும் நிலையில், மூளையின் சில பகுதிகளுக்கு பிராணவாயு சரியான முறையில் கிடைக்காமல் மூளையின் செயற்பாட்டு விசை நரம்புகள் செயல் இழக்கின்றன. இந்த உணர்ச்சி அலைமோதல் எல்லை கடக்கும் நிலையில் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

பொதுவாக, இன்றைய அவசர குழப்பமயமான வாழ்க்கை முறையே இந்நோய் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இதனை இன்னுமொரு முறையில் கூறப்போனால், எமக்கு ஏற்படப்போகும் பாரிய நோயின் முன்னறிவித்தல் என்றுகூடச் சொல்லலாம். இரத்த அழுத்தம் உடலில் அதிகரிக்கும்போது, ஆரம்பத்தில் அதுபற்றி பெரும்பாலாநோருக்கு வெளியே தெரிவதில்லை.

### இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?

உணர்ச்சிகள் அல்லது மனப்பளு, மனக்கொந்தளிப்பினாலும், இதயம் இரத்தத்ததை வாயுவின் வேகத்தால்



உந்தித்தள்ளும் வேகத்தின் இயல்பில் மாற்றம் ஏற்படும்போதும் ஏற்படுகின்றது.

நெடு நாட்கள் தொடரான மலச்சிக்கல், மதுபானை, புகையிலை பாவனை, மாப்பொருட்கள், கொழுப்பு, இறைச்சி போன்றவற்றை அதிகமாக உண்பதனாலும், மிகுந்த உழைப்பு, மனக்களிப்பு, நாடியின் மிகுந்த துடிப்பு, அதிக சிந்தனை, காமம், மேக நோய்கள், தொண்டை நோய், பித்தப்பை நோய், ஈரல் மற்றும் நீர்ப்பை போன்றவற்றில் ஏற்படும் புண்கள், மனக்கவலை, பயம், பதட்டம் காரணமான உறைப்புக்களை உண்ணுதல், நச்சுள்ள உணவுப் பொருட்களை உண்ணுதல் போன்ற காரணங்களால் இந்நோய் ஏற்படுகின்றது.

இந்நோய் இயல்பாகவே கூடவும், குறையவும் செய்யும். நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது இரத்த அழுத்தம் குறைவடைகின்றது. திடீரென ஏற்படும் மன எழுச்சி இரத்த அழுத்தத்தினை திடீரென உயர்த்துகின்



றது. உடலியல் மற்றும் மனவியல் காரணங்கள் ஆகிய இரண்டு விதமான செய்கைகளே குருதி அனல்வாதத்திற்கு காரணிகளாக அமைகின்றன.

### நீங்கள் குறிப்பிட்ட இரு காரணிகளையும் தெளிவுபடுத்த முடியுமா?

ஆம்,உடலியல் காரணி என்றால் -புகை பிடிப்பவர்களுக்கும், மதுபோதை, போதை மருந்துகள் அருந்தும் பழக்கமுடையவர்களுக்கும் இரத்த நாளங்கள் குறுகிவிடுகின்றன. அதாவது, இரத்த நாளங்கள் விரிந்து சுருங்கும் தன்மை சிறிது சிறிதாக குறையத் தொடங்குகின்றது. இதனால் இந்நோய் ஏற்பட ஏதுவாகிறது. மேலும், அதிகமாக மீன், இறைச்சி உண்பதினால் இரத்தத்தில் கொழுப்பு அதிகமாகி இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிகின்றது. இதனாலும் இந்நோய் ஏற்பட ஏதுவாகிறது.

எந்தவித வேலைகளையும் செய்யாமல் உடற்பயிற்சியின்றி சோம்பேறித்தனமாய் இருப்பவர்களுக்கு உணவு அதிகமாகி உடல் எடை கூடுகின்றது, இதனால் உடல் உழைப்புக் குறைந்து கொண்டே போவதால் உடலில் கொழுப்புப்படிவு அதிகமாகி நோயைத் தோற்றுவிக்கின்றது.

உடலைப் பொறுத்தமட்டில் வரவு செலவுக் கணக்கு சரியாக இருக்கவேண்டும். சேமிப்பு ஒருபோதும் இருக்கக்கூடாது. நாம் உண்ணும் உணவில் உப்பு, சீனி கூடினாலும் இரத்தத்தின் கெட்டித்தன்மையை அதிகமாக்கி பாயும் தன்மையைக் குறைக்கின்றது. இரத்த ஓட்டத்தில் பலத்த மாறுபாடுகளை இவை உண்டாக்குவதால் அவற்றை அளவுடன் சேர்த்துக்கொள்வதே நல்லது.

மனவியல் காரணி என்றால் -கோபம், பகைமை, வெறுப்பு, வஞ்சம் போன்ற தீய குணங்கள் எமது நாளமில்லாச் சுரப்பிகளையும், தானியங்கி நரம்பு மண்டலத்தையும் தாக்குவதால் இரத்த அழுத்தம் கூடுகின்றது. ஆகவே, தீய எண்ணங்கள் மற்றும் குணங்கள் எம்மை நோயாளிகளாக மாற்றுகின்றது. பயம், பதற்றம், கவலை போன்ற குணங்கள் எமது உடலின் இயக்கத்தில் பல மாற்றங்களைத் தோற்றுவித்து இரத்த அழுத்தத்தைக் கூட்டுகின்றன. சில சில நேரங்களில் கவலைப்படுவார்கள், சிலர் எப்போதும் கவலைப்படுபவதை பழக்கப்படுத்தி தொழிலாக வைத்துக்கொள்வார்கள். அவர்களில் சிலருக்கு இந்நோயின் வாய்ப்பு அதிகமாகின்றது.

உணர்ச்சிகளினால் ஏற்படும் மனப்போராட்டம் மற்றும் தொடராக இருக்கும் மனப்போராட்டம் போன்றன நரம்பு மண்டலத்தை தாக்கும்போது கூடுதல் இரத்த அழுத்தம் உருவாகிறது. சிலருக்கு பொருளாதாரப் பிரச்சினைகள், பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் தோன்றும்போது வாழ்க்கை துன்பகரமாகத் தோன்றி மனப்பளு தோன்றுகிறது. மனப்பளுவும் இந்நோய்க்கு மூல காரணமாகின்றது.

பெண்கள் கருவுற்ற காலங்களில் உடலில் நச்சுநிலை கூடுவதால் இரத்த அழுத்தம் கூடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. நாளமில்லா சுரப்பிகளின் இயக்கம் மாறுபடுவதால் இரத்த அழுத்த நோய் உண்டாகிறது. உதாரணமாக, கணையம் வேலை செய்யாதபோது நீரிழிவுநோய் உண்டாகிறது. அந்த நீரிழிவு நோயினால் இரத்த அழுத்த நோய் உண்டாகும் வாய்ப்பும் அதிகரிக்கின்றது.

இரத்த அழுத்த நோய் வந்தவர்களுக்கு சிறுநீரக் கோளாறுகள் உண்டாவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. அதாவது, சிறுநீரகம், இரத்தத்தில் அதிகளவில் உள்ள உப்புச்சத்தை சிறுநீர் மூலம் வெளிப்படுத்துகின்றது. சிறுநீரம் பழுதடையும்போது இரத்தத்தில் உப்புச்சத்து கூடுகிறது. உப்புச்சத்து கூடும்போது இரத்த ஓட்டத்தில் பலத்த மாறுபாடுகளை உருவாக்குகிறது. சரியான ஊட்டச்சத்து உட்கொள்ளாமை உழைப்புக் குறைவான சோம்பேறி வாழ்க்கை, தொழிற்சாலைகள், ரயில் மற்றும் பஸ் நிலையங்கள், குவாரி போன்ற இடங்களில் கேட்டும் பேறிரைச்சல் காரணமாக அமை



தியான நிதானமான வாழ்க்கையை கழிக்க முடியாமல் அன்றாடம் எந்த நேரமும் பரபரப்புடன் இயங்க வேண்டிய நிர்ப்பந்த நிலை, பல்வேறு காரணங்களால் வாழ்க்கையில் போராடியாக வேண்டிய சங்கடம், தவிர்க்க முடியாத நிலையில் ஏற்படும் கோபத்தால் உண்டாகும் ஆபேச உணர்வுகள், கவலை, ஏமாற்றம் காரணமாக மனதில் ஏற்படும் அதிர்ச்சிகள் போன்ற காரணிகளும் உயர் இரத்த அழுத்த நோய்க்கு காரணமாக அமைகின்றன.

### இந்நோயின் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன?


நாடி நரம்பும்புகளில் இரத்தக் குழாய்கள் முறுக்கேறி இயற்கையாக ஓடிக்கொண்டிருக்கும் இரத்த வேகம் குன்றி சிறு குழாய்களில் இரத்தம் கசிந்துவிடும். அதனால் மயக்கம், தலைச்சுற்று, கை மற்றும் கால் சோர்வு, ஞாபக மறதி போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தி முளையில் இரத்தக் கசிவை ஏற்படுத்திவிடும். அதனால் திடீரென பேச்சும் ஞாபக மறதியும் ஏற்பட்டு படுக்கையில் வீழ்த்திவிடும் ஒரு நோயாக இருக்கிறது.

மூளையின் பகுதிகளில் கை, கால், வாய், முகம் போன்ற பாகங்கள் தொடர்பு பட்டுள்ளதால் அது செயலிழந்துபோய் விடுகின்றன. இதை தமிழில் பாரிசவாதம் என்றும் ஆங்கிலத்தில்கச்ணுரச்டுதூண்டிண்என்றும் கூறுகின்றனர்.

### இந்நோயிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?

இரத்த அழுத்தநிலை சீராக இருக்கும்வரை உடல்நலம் சீராக இருக்கின்றது. இரத்தவேகம் குறைந்தாலோ அல்லது கூடினாலோ இரத்த அழுத்த நோய் உருவாகிவிட்டது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். கூடியவரை இரத்த அழுத்த நோய் வராமல் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். வந்தால் மருத்துவ சிகிச்சை மூலம் முற்றிலும் குணப்படுத்திக்கொள்வது சாத்தியமில்லை என்று' கூறினாலும் மனவியல், உடலியல் தொடர்பான சில நடைமுறைகளை கையாள்வதினாலும் இயற்கையுடன் ஒத்து நடப்பதன் மூலமும் இரத்த அழுத்த நோயினை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

குறிப்பாக, உடலியல் மற்றும் மனவியல் ரீதியாக கவலையற்று மன மகிழ்வுடன் வாழும் வாழ்க்கையை நடாத்திச் செல்லுதல், எந்தக் காரியத்தையும் அவசரமின்றி நிதானமாக செய்வதற்கு கற்றுக்கொள்ளல், நேரம் கிடைக்கும்போதேல்லாம் ஓய்வு எடுத்தல், உடற்பயிற்சியை தினமும் செய்தல், அளவான உணவை உட்கொள்ளல் போன்ற விடயங்களை கடைப்பிடிப்பதன் மூலமே நாம் இந்நோயிலிருந்து பாதுகாப்புப்பெற முடியும்.






நேர்காணல் :-
பைஷல் இஸ்மாயில்



# நாவிதன்வெளியில் சரஸ்வதி சிலையை சர்வதேச அழகுராணி திறந்து வைத்தார்























**(காரைதீவு நிருபர் சகா)**

ஐக்கிய இராச்சியத்தின் இவ்வாண்டுக்கான சர்வதேசஅழகி (MISS INTERNATIONAL UK &2020&2022)செல்வி இவஞ்சலின் லட்சுமணர் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில்(தேசியபாடசாலை) அவரால் நிறுவப்பட்ட 10அடி உயர சரஸ்வதி சிலையை நேற்றுமுன்தினம் (20)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் திறந்துவைத்தார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளியைச்சேர்ந்த ஐக்கிய இராச்சியத்தின் இவ்வாண்டுக்கான சர்வதேச அழகி செல்வி இவஞ்சலின் லட்சுமணர் இதற்கென இலங்கை வந்திருந்தார். அவருடன் அவரது தாயார் சாந்திராஜகருணாவும் வருகைதந்தனர். இலங்கை சுற்றுலாஅதிகாரசபை அவர்களுக்கான விருந்தினர் அங்கீகாரத்தை வழங்கியுள்ளதுடன் கூடவே அதன்பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

முன்னதாக அதிதிகள் பாண்ட் வாத்தியம் சகிதம் மாலைசூட்டி பூச்செண்டு வழங்கி கோலாகலமாக வரவேற்கப்பட்டனர்.

பாடசாலை வளாகத்தில் நிறுவப்பட்ட சரஸ்வதித்தாயின் சிலை திறப்புவிழா வித்தியாலய அதிபர் சீ.பாலசிங்கன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக சரஸ்வதித்தாயின் சிலையை உலகஅழகுராணி இவஞ்சலின் திறந்துவைக்க சிலைக்கான நினைவுபடிமக்கல்லை அவரது தாயார் சாந்திராஜகருணா திரைநீக்கம் செய்து வைத்தார்.

தமிழ்ப்பாட ஆசிரியை திருமதி ஜெயரஞ்சினி தயாபரன் வரவேற்புரைவழங்க சிரேஸ்டஆசிரியர் நடராஜா கோடீஸ்வரன் நிகழ்ச்சியை நெறிப்படுத்தித் தொகுத்தளித்தார்.

சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்பணிப்பாளரும் பாடசாலைஇணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கௌரவஅதிதியாகக்கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். பிரதிஅதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் விசேடஉரை நிகழ்த்தினார்.

மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின. உலகஅழகி வருகைதந்து அவர் நிருமாணித்த சரஸ்வதி சிலையைத்திறந்துவைத்தமைக்காக உலகஅழகி இவஞ்சலின் அவரது தாயார் சாந்தி ஆகியோருக்கு பாடசாலைச்சமுகம் பொன்னாடை போர்த்துக்கௌரவித்தது. உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா அவர்களுக்கு நன்றியுடன்கூடிய வாழ்த்துப்பத்திரத்தை வழங்கிவைத்தார்.

பின்னர் உலகஅழகி இவஞ்சலின் 'வணக்கம் நன்றி' எனும்வார்த்தைகளை தமிழில் பேசி உரையை ஆங்கிலத்தில் பேசினார். சகோதாரஇனத்தைச்சேர்ந்த அவரது தாயார் சாந்திராஜகருணா தமிழில் அழகாக உரையாற்றினார். பாடசாலைக்குத் தேவையான மேடை மற்றும் ஒலிபெருக்கி வசதிகளையும் செய்துதருவதாக அவர் உறுதியளித்தார். உபஅதிபர் பி.ஜெகதீசன் நன்றியுரையாற்றினார். உலகஅழகியின் உறவினரான ஆசிரியை சிவானந்த ருபனின் விருந்துபசாரமும் இடம்பெற்றது.

விழாவில் உலகஅழகி இவஞ்சலின் பாட்டனார் முன்னாள் அதிபர் ராஜசிங்கத்திற்கு ஆத்மார்த்த அஞ்சலி செலுத்தப்பட்டர். அவரது குடும்ப உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் அக்டோபரில் யப்பானில் நடைபெறவிருக்கும் உலகஅழகி தெரிவுப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் பபிரித்தானிய உலகஅழகி இவஞ்சலின் வெற்றிபெறவேண்டி அங்கு இறை பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது.

அதன்பின்னர் அவர்களால் குடியிருப்புமுனையில் நிருமாணிக்கப்பட்ட வீடொன்றினை வசதிகுறைந்த குடும்பமொன்றிற்கு வழங்கிவைத்து அதற்கான தளபாடங்களையும் வழங்கிவைத்தனர்.

19%0களில் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் அதிபராயிருந்த ராஜசிங்கம் அவர்களின் பேத்தியான இவர் பாரியபிரித்தானியாவின் அழகுராணியாக மூன்று தடவைகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

முள்ளாள் அதிபர் ராஜசிங்கத்தின் மகன் ஜீவராஜ௵ சாந்தி ராஜகருணா தம்பதியினரின் மகளான உலகஅழகுராணி இவஞ்சலின் லண்டனில் பிறந்துவளர்ந்தவர். கிரிக்கட் வலைப்பந்து போன்ற விளையாட்டுகளில் மிகுந்த ஈடுபாடுகொண்ட அவர் அழகுக்கலையில் முத்திரைபதித்தவர்.

ராஜசிங்கத்தின் குடும்பத்தினர் இப்பிராந்தியத்தில் வசதியில்லாத மக்களுக்கு வடு கட்டிக்கொடுத்தல் பாடசாலைகளுக்கு உதவுதல் போன்ற சமுகசேவைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதன் ஓரங்கமாக இப்பாடசாலையில் 10அடி உயர சரஸ்வதி சிலை நிறுவ நிதியுதவி நல்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடையேறினான்

படுவான் பாலகன்

காகங்கள் கரைவதனை நிறுத்தி இரண்டு மூன்று மணித்தியாலயங்கள் ஆகிவிட்டன. சிறுவர்களின் விளையாட்டு ஓசையும் அடங்கிவிட்டது. மௌனமாய் தெரு காணப்படுகின்றது. தொலைபேசியை பார்ப்பதும் வைப்பதுமாக சின்னப்பிள்ளை இருந்து கொண்டிருக்கின்றாள். வழமையாக அழைப்புவரும் நேரத்திற்கு அழைப்பில்லாமையினால் அந்திரத்தில் நடப்பதுபோன்று அங்கும், இங்குமாக நடந்துகொண்டிருக்கின்றாள். நேரத்தினையும் அடிக்கடி பார்த்துக்கொண்டே இருக்கின்றாள்.

படித்துக்கொண்டிருந்த சின்னப்பிள்ளையின் மகள்,

''என்னம்மா ஓரிடத்தில் நிற்காம நடக்கின்றீர்கள்''

என்று கேட்க, கோபத்துடன்

''உனக்கு கட்டாயம் சொல்லித்தான் ஆக வேண்டுமா?''

என்று அதட்ட, மகளுக்கும் அம்மா கோபத்தோடு இருப்பது விளங்கிவிட்டது. இன்னமும் பேசினால் ஏச்சு பலமாக விழும் என்பதினால் பேசாமலே இருந்தாள்.

தன் மகளுக்கு ஏசிவிட்டேன் என்ற கவலை சின்னப்பிள்ளைக்கு இருந்தாலும், அவள் கணவன் அழைப்பு எடுக்கவில்லையே என்ற கவலைதான் அவள்மனதில் ஓடிக்கொண்டிருந்தது. நேரம் கடந்து செல்ல செல்ல அவளின் மனதில் பயமும், பதட்டமும் கூடிக்கொண்டே போனது. வழமையாக 9மணிக்கு உணவு உண்ணும் சின்னப்பிள்ளையும், அவள் மகளும் இன்று 10மணியை கடந்தும் உணவு உண்ணவில்லை.

''அம்மா பசிக்குது''

என மகள் சத்தமிடுகின்றாள்.

''பசித்தாள் போட்டு சாப்பிடன்'' என்கிறாள் சின்னப்பிள்ளை.

தரம் 9ல் கற்கும் சின்னப்பிள்ளையின் மகளுக்கு, அவளது தாயே பாத்திரத்தில் உணவும், நீரும் எடுத்துக்கொண்டு அருகில் கொடுக்க வேண்டும். இருவரும் இணைந்து இரவில் உட்கொள்வர். தாய் இல்லையென்றால் உணவு உண்ணவேமாட்டாள். அவளாக உணவு பாத்திரத்தில் எடுத்து உண்டதில்லை.

தாய் இவ்வாறு பேசியதும் உடனே ஏங்கி ஏங்கி அழத்தொடங்கினாள். வீட்டின் விறாந்தையில் இருந்து படித்துக்கொண்டிருந்தவள், வேகமாக எழுந்து, புத்தகத்தினை தனது வீட்டின் ஓரமாகவிருந்த பையினுள் வைத்துவிட்டு தலையணையை எடுத்துக்கொண்டு, மண்டபத்தின் ஓரமாக அழுதபடியே தூங்கினாள்.

எப்போதும் அம்மாவை இறுகி அணைத்துக் கொண்டு தூங்கும் இவள், என்றுமில்லாதவாறு தனியாகவே தூங்கினாள்.

சின்னப்பிள்ளையும் அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள். இவளும் பலமுறை தொடர்பை ஏற்படுத்தினாலும் தொலைபேசி வேலைசெய்யவே இல்லை. இவளின் வீட்டிற்கு ஒரு கதவே உள்ளது. அக்கதவும் தகரத்தினால் செய்யப்பட்டது. திறந்திருந்த அக்கதவின் நிலையில் சாய்ந்து கொண்டு தொலைபேசியை பார்த்துக் கொண்டே இருந்தாள்.



பிள்ளை உணவு உண்டாளா? என்ன செய்கின்றாள்? என்ற சிந்தனைகள் அவள் மனதில் எள்ளவும் ஓடவில்லை.

சிறிதாக கூட திட்டினாள் ஏங்கி அழுவாள் என்பதினால், ஒருநாள் கூட திட்டமாலேனு, மகளை செல்லமாக வளர்த்துவிட்டாள். அவளதும் தந்தையும் எதைக்கேட்டாலும் வாங்கியே கொடுப்பார். ஒருநாள் கூட மறுப்புதெரிவித்ததில்லை. கஸ்டங்கள் தெரியாமலே பிள்ளையும் வளர்ந்து விட்டாள். தந்தைகூடவே இருக்காததினால் தாயே தந்தையாக இருந்துவிட்டாள்.

திருமணமாகி 20வருடங்கள் ஆகிவிட்டன. நான்கு தடவைகள் மத்தியகிழக்கு நாட்டிற்கு வேலைக்கு சென்று திரும்பி வந்திருக்கின்றான் சின்னப்பிள்ளையின் கணவன். 5வது தடவையாக 2020இல் வெளிநாட்டிற்கு மீண்டும் சென்றவன்.



திருமணத்திற்கு முன் வரம்பு வேலை, வேளாண்மை வெட்டுதல், நெல்லுக்கட்டுதல் என பல வேலைகளை செய்தவன். நெல் அறுவடை செய்வதற்கு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டதினால் வெளிநாட்டிற்கு சென்றுதான் வருமானத்தினை ஈட்டி வருகின்றான். திருமணமாகி 20வருடங்களில் மொத்தமாக ஒரு வருடங்கள் மாத்திரம்தான் நாட்டில் இருந்திருக்கின்றான்.

வெளிநாடு செல்வதற்கும் தங்கள் கையில் பணம் இல்லாததினால், 10வீத வட்டிக்கு கடன் வாங்கிதான் வெளிநாடு சென்றவன். வாங்கிய கடனையும், கடனுக்கான வட்டியை அடைப்பதற்கும் நீண்ட காலங்கள் எடுத்துவிட்டன. சம்பளமும் மிகக்குறைவு. வெளியில் சென்று வேறுவேலைகள் செய்து வருமானமும் ஈட்ட முடியாது. இதனால் குடும்பத்தில் பெரிதான வளர்ச்சி இல்லையாயினும், அன்றைக்கு அன்றை கடன்வாங்காது உணவு உண்டு சிறிது சேமிக்கும் அளவிற்கு வந்துவிட்டனர்.

நிலையில் சாய்ந்த சின்னப்பிள்ளையின் மனதில் நேற்று, நேற்றுமுந்தினம் நடந்த சம்பவங்கள் படமாய் மனதில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

வீட்டின் பின்பக்கமாய் நிற்கின்ற புளியமரத்தில் நின்று பக்குள் கத்தியதையும், திணுக்கிட்டு அவள் கத்தியதும், வீட்டில் கெட்ட விடயங்கள் நடைபெறுவதாக கண்ட கனவுகளும் இவளை உறுத்திக்கொண்டே இருந்தன. காகங்கள் வட்டமாக கரைந்ததையும் நினைக்கும் போது, இவளை அறியாத பய உணர்வு கண்களில் இருந்து கண்ணீரை வரவைத்தது.

தனது தாய், தந்தை இறந்தபோது கூட அவர்களின் இறுதிக்கிரியைகளில் அவனால் கலந்து கொள்ள முடியவில்லை. வேலை செய்யும் கம்பனியில் இருந்து வீட்டிற்கு வருவதற்கு நீண்ட நாட்கள் எடுத்தமையினால் இறுதிக்கிரியைக்கூட அவனால் செய்ய முடியவில்லை. வெளிநாட்டு வாழ்க்கை தொடர்பில் வெறுப்பும் வேதனையும் இருந்தாலும் அவற்றை கூறி தனது மனைவியுடன் சஞ்சலித்துக் கொள்வான்.

''பிள்ளையின் எதிர்காலத்திற்காக உழைக்கத் தானே வேண்டும்''.

''இனி நாட்டிற்கு வந்தால் திரும்ப வெளிநாடு போறதில்லை''

என பல தடவை சின்னப்பிள்ளையுடன் பேசிக்கொண்டுள்ளான்.

''பிள்ளையும் வளர்ந்துவிட்டாள் நம்மட ஊரிலே ஏதாவது தொழிலை செய்திட்டு இருப்பதுதான் நல்லது''

என சின்னப்பிள்ளையும் பலமுறை அவனிடம் கூறியிருக்கின்றாள்.

''பொறுத்ததோடு பொறு இன்னும் ஒரு வருடத்தில் எல்லாவற்றையும் நிறுத்திட்டு வந்திடுவன்'' என்று மூன்று நாட்களுக்கு முன்னர் அவன் கூறியதையும் சின்னப்பிள்ளை நினைத்துக்கொண்டிருக்கின்றாள்.

''20வருடங்கள் ஓடித்தானே போய்விட்டது''.

''இன்னமும் ஒருவருசம் தானே''

''பார்த்திருக்க ஒரு வருடம் முடிந்திடும்'' என்று கூறி மனச்சந்தோசம் கொண்டதையும் எண்ணிக் கொண்டிருந்தாள்.

சின்னப்பிள்ளையின் உறவுக்காரர் ஒருவரும் இவளின் கணவனுடன் வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருக்கின்றார். அவர் நேற்று நீண்ட காலத்திற்கு பிறகு தொலைபேசி எடுத்து பேசியிருந்தார். பிள்ளையையும், வீட்டு நிலைமைகளையும் விசாரித்து இருந்தார்.

அவரின் பேச்சில் பதட்டமும் தெரிந்தது. எதையோ? என்னிடத்தில் மறைத்தது போல் தென்பட்டது. தீடிரென ஏன் தொலைபேசி எடுத்தார்? எவ்வாறு என்னுடைய தொலைபேசி இலக்கம் கிடைத்தது என்று கேட்ட போதும் சமாளித்தே பேசினார். இவரையும் பார்க்க சென்றதாகவும், இருவரும் பேசியதாகவும் கூறினார். நிறையவே இவரைப்பற்றி புகழ்ந்தார், பரிதாபப்பட்டார். என்பதை நினைத்து கொண்ட இவளுக்குள் பல சந்தேகங்கள் தோன்றின

வீட்டிற்கு தான்வந்துதான் பிள்ளைக்கு வீடு கட்டுவதென்றும், கல்வியில் உயர்ந்தவளாக கொண்டுவர வேண்டும். தனது மனதில் இருந்த விருப்பங்களை தனது கணவன் அண்மையில் பேசியதையும் நினைவுபடுத்தி பார்த்துக்கொண்டே இருக்கின்றாள். அதனை நினைத்து கற்பனையிலேயே ஆழ்ந்தாள்.

கைகள் கதவில் பட மீண்டும் நிமிர்ந்து பார்க்கின்றாள் நள்ளிரவைக்கடந்து விட்டது.

''பொழுதுவிடிந்ததும் இவருக்கு அருகில் வேலைசெய்கின்ற கண்ணனிடம்தான் கேட்க வேண்டும்''.

''அவனின் தொலைபேசி இலக்கமும் தெரியாது''.

''காலையில் போய்தான் அவங்கட வீட்ட போய், இலக்கத்தை பெற்று பேசி பார்க்க வேண்டும்'',

என்று தனக்குள்ளே பேசிக்கொண்டு உட்காந்திருக்க விடிந்துவிட்டது.

கண்கள் இரண்டையும் சீலையால் கசக்கிக் கொண்டு வேகமாக செல்கின்றாள்.

பக்கத்தில் உள்ளவர்கள்,

''சின்னப்பிள்ளை ஏன் வேகமாக காலையில் நேரத்தோடு வேகமாக நடந்து போகின்றாள்'' என பேசிக்கொள்கின்றனர்.

500மீற்றருக்கு அப்பால்தான் கண்ணனின் வீடும் உள்ளது. அவள் சென்றுகொண்டிருக்கும் போது,

''வெளிநாட்டில் வேலையும் செய்யும் போது ஒருவர் விழுந்து செத்ததாம்''

என்று பேசிக்கொள்கின்றனர். அதையும் பொருட்படுத்தாமல் பதற்றத்துடன் செல்கின்றாள்.

கண்ணின் வீட்டின் வாசலில் நின்று சத்தமிடுகின்றாள். கண்ணனின் தாய் வெளியில் வருகின்றாள். சின்னப்பிள்ளையின் வருகை கண்ணனின் தாய்க்கு விளங்கிவிட்டது. இரவே கண்ணன், சின்னப்பிள்ளையின் கணவன் இறந்த செய்தியை சொல்லிவிட்டான். காலையில் சென்று கூறுவோம். என்றுதான் கண்ணனின் தாயும் இருந்துவிட்டாள்.

சின்னப்பிள்ளை வீடுதேடி வந்ததும் என்ன செய்வதென்று தெரியாது? தடுமாறுகிறாள்.

''என்ன வந்த சின்னப்பிள்ளை என்று பேச்சு தடுமாறாவே வினவினாள்''.

''இவர் இரண்டு நாளாக பேசவில்லை''.

''என்னமோ தெரியா''?

''கனவும் வித்தியாசமா கண்டன்''.

''மனமும் சங்கடமாக இருக்கு''.

''அதான் கண்ணனைப் போய் பார்க்க சொல்லுவம் என்று வந்தன்''என்று கூற,

கண்ணனின் தாயின் கண்களில் இருந்து கண்ணீர் சொரிய விம்மி விம்மி அழுதுகொண்டே உன்கணவன் பாடையேறினான் என்று கூற, சின்னப்பிள்ளையும் ஒவென்று கீரிட்டு எல்லோரும் ஒன்றுசேரும்படி கதறினாள்.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com

supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 14

# மூத்த எழுத்திலக்கிய கலைஞர் பரமேஸ்வரி அருணாசலம் சாதனைக் கலைப் பயணம்

**பண்டைய காலம் தொட்டு இன்றுவரை ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இலக்கியமும் , கலையும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. அவர்கள் தத்தமது திறமைகளை வெளிப்படுத்தும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட இலக்கியம், கலை என்பன பெரும் பங்காற்றுகின்றது என்பதில் ஐயமில்லை.**

அவ்வகையில் , 1952ஆம் ஆண்டு அமரர் அருணாசலம் செல்லம்மா தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்த இவர் கண்டி மாவட்டத்தினை பிறப்பிடமாகவும், திருகோணமலை மாவட்டத்தின் உவர்மலைப்பகுதியினை வசிப்பிடமாகவும் கொண்டவர் ஆவார். இவர் தனது பாடசாலைக் கல்வியினை யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயம் , யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக்கல்லூரி, திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளில் பயின்றவர். இவர் எழுத்து இலக்கியத்துறையில் கவிதை, சிறுகதை , சிறுவர் கதை , கட்டுரை, நாட்டார் பாடல் , விபரணம் போன்ற பல்வேறு இலக்கியப் படைப்புக்களை தேவி, பரா போன்ற புனைபெயர்களில் எழுதி வருகின்றார். தமிழ் வளமும் எழுத்து இலக்கிய ஆர்வமும் கொண்ட இவர் இலக்கியத்துறை மட்டுமன்றி கலைத்துறையிலும் அதீத ஈடுபாடு கொண்டு பல நாடகங்களையும் எழுதி மேடையேற்றியுள்ளதோடு இசையும் கதையும் ,தாளலயம் , சிறுவர் நாடகம், போன்ற பல்வேறு கலைச் செயற்பாடுகளிலும் ஆர்வம் மிகுந்தவராக வலம் வந்து கொண்டிருக்கின்றார். திருகோணமலை மாவட்டத்தில் 30 வருடங்களுக்கு மேலாக கலை இலக்கியத் துறையில் சேவையாற்றி வரும் இவர் 2008ஆம் ஆண்டு முதல் இன்று வரை தனது திறமை மிகு படைப்பாற்றல் மூலம் பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களையும் ,சான்றிதழ்களையும், பாராட்டுக்களையும் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இத்தகைய பெருமைமிகு கலைஞர் 2017ஆம் ஆண்டில் ‘வரும் வசந்தகாலம்’ எனும் சிறுகதைத் தொகுப்பையும் , 2019ஆம் ஆண்டில் ‘கூடிவாழ்’ எனும் சிறுவர் சிறுகதை நூலினையும் இதுவரையில் வெளியிட்டு தமிழ் இலக்கியத் துறையில் தடம் பதித்த ஓர் பெண்ணியப் படைப்பாளி ஆவார். திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச கலாசார அதிகார சபையின் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவராகவும் , திருகோணமலை திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளருமாகவும் சேவையாற்றி வருகின்றார். இவ்வாறாக ஈழத்து தமிழ் எழுத்திலக்கிய உலகில் தன் சிந்தனை மிகு கருத்தாழம் கொண்ட எழுத்துத் துறையின் மூலம் நம் மண்ணுக்கு கலைச்சேவை ஆற்றி வருபவரான கலாபூஷணம் செல்வி. பரமேஸ்வரி அருணாசலம் கலைஞர் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் ‘திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை’ என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.



**? எழுத்து இலக்கிய துறையிலும், கலைத்துறையிலும் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றிய ஆரம்ப காலப் பயணம் பற்றியும், அதன் ஊடாக உங்களுக்கு கிடைத்த முதல் வாய்ப்பு பற்றியும் கூறுவீர்களா?**

எனது பாடசாலை காலத்தில் நாடகங்களில் நடித்து அனைவராலும் பாராட்டப் பெற்றேன். அத்துடன் கலைத்துறை சார்ந்த பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றினை நேரில் சென்று பார்த்து வருவேன். இவ்வாறான செயற்பாடுகள் மூலமாக எழுத்து இலக்கிய துறையில் எனக்கு ஆர்வம் ஊன்றச் செய்தது. இவ் ஆர்வத்தின் நிமித்தம் என்னை நானே வளப்படுத்திக் கொண்டு 1990ஆம் ஆண்டில் எனது முதற் பயணத்தை ஆரம்பித்து தேவி, பரா என்ற புனைப் பெயர்களைக் கொண்டு சிறுவர் கதைகள் ,சிறுகதைகள், கட்டுரைகள், விபரணம் ,நாட்டார் பாடல்கள், கவிதைகள் என பல்வேறுபட்ட இலக்கிய படைப்புக்களை எழுதத் தொடங்கினேன். எழுத்து இலக்கியத்துறை மட்டுமன்றி கலைத்துறையிலும் பல நாடகங்களை எழுதி மேடையேற்றினேன். மற்றும் இசையும் கதையும், தாளலயம் , சிறுவர் நாடகம் போன்ற படைப்புக்களிலும் ஈடுபாடு காட்டி வந்தேன். மாதர் சங்கம், கலை மன்றங்களில் இணைந்து கலை மற்றும் சமூகம் சார் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது எனது எழுத்து இலக்கியத் துறை, கலைத்துறை ஆகியவற்றை படைக்க முனைந்தது. இவ்வாறாக எழுத்து இலக்கியத் துறையை ஆரம்பித்த எனக்கு என்னுடைய திறமையை காட்டுவதற்கு முதல் வாய்ப்பாகவும், சவாலாகவும் 1993இல் யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியில் எனது ‘புது வாழ்வு பிறக்கட்டும்’ என்ற கவிதை பிரிவுக்காக மூன்றாமிடம் கிடைத்தமையைக் கூறலாம். அத்துடன் எனது முதல் அரங்கு நிகழ்வாக ‘சக்திகள் சபதம்’ என்ற கூத்துருவபுராண நாடகத்தை மேடையேற்றம் செய்தமை பலரின் பாராட்டைப் பெற்றதுடன் யாழ்நகரில் பல தடவைகள் மேடையேற்றப்பட்டமையை மிகவும் பெருமையாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இவ்வாறாக எழுத்து இலக்கியத் துறையிலும், கலைத் துறையிலும் இன்றும் அதற்கான தேடலும் ஆர்வமும் சற்றும் குறையாமல் கிடைக்கும் அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்தி என்னால் முடிந்த கலைச் சேவையை எம் மண்ணுக்கு ஆற்றி வருகின்றேன் என்பதை பெருமையாக இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

**? இதுவரையில் நீங்கள் எழுத்து இலக்கியத் துறையிலும், கலைத்துறையிலும் படைத்த படைப்புக்கள் பற்றி?**

இதுவரையில் ஏராளமாக எழுத்து இலக்கியத் துறையிலும், கலைத் துறையிலும் பல படைப்புகளை படைத்துள்ளேன். அவற்றில் குறிப்பிட்டு கூறுவதாயின் பிழைக்கத் தெரியாதவன், அரைப்பிடிகீரை , அவள் தான் தாய், பெரிய சொத்து போன்ற சிறுகதை படைப்புகளையும், கருணையுள்ள கண்ணன் ,தன் வினை தன்னைச் சுடும், சிறுவன் சரவணன் போன்ற சிறுவர் கதை படைப்புகளையும் , சமர்க்களத்தை தள்ளி வைப்போம் சமாதானத் தேர் இழுப்போம், பட்ட துயர் தீர்ப்பது யார்?, இந்த பாவிகளை காப்பது யார்?, கடந்த அரை நூற்றாண்டில் கவிதைத் தூறல்கள் போன்ற விபரணங்களையும், சொந்தம் சொந்தம் தான் , கோழிக்கள்ளன், காதல் என்ன கடைச் சரக்கா போன்ற நாட்டார் பாடல்களையும், எம் விதியோ , மீண்டும் வந்திடாதே, அம்மா அடுத்த தேர்தல் வரட்டுமே போன்ற பாடல்களையும் எழுத்து இலக்கியத்துறையில் படைத்துள்ளேன். கலைத்துறையில் சக்திகள் சபதம் என்ற கூத்துருவ புராண நாடகத்தையும், சிவன்ராத்திரி , சமாதானமே வருக போன்ற சிறுவர் நாடகங்களையும் , புதிய வார்ப்புகள் என்ற சமூக நாடகத்தையும் மேடை ஏற்றியுள்ளேன் .அத்துடன் எங்களுக்கும் காலம் வரும் , இடம்பெயர்வு, பெண் விடுதலை போன்ற வில்லுப்பாட்டு நிகழ்வுகளையும், ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்ல, சிக்கன்கூனியா, சம உரிமை ,முதியோர் எமது சொத்துக்கள் போன்ற தாளலய நிகழ்வுகளையும், சிறுவர் துஷ்பிரயோகம் என்ற இசையும் கதையும் நிகழ்வினையும், நவீன பாரதி, மாப்பிள்ளை சந்தை என்ற புத்தாக்கத்தையும் படைத்துள்ளேன்.





**? இலக்கியத்துறையில் நீங்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் பற்றியும், எதிர்காலப் படைப்புக்கள் பற்றியும்?**

2014ஆம் ஆண்டு ‘வரும் வசந்த காலம்’ என்ற நூலினை வெளியிட்டு இருந்தேன். இந்நூலானது ஒரு சிறுகதைத் தொகுப்பாகும். போரினால் பாதிக்கப்பட்ட ஒரு சிலர் பட்ட துன்பங்களுடன் கற்பனைக் கதையுடன் சேர்ந்த உண்மைச் சம்பவங்களை எழுத்து வடிவத்தில் புனைந்து நூல் உருவாக்கம் கொடுத்தேன். இவ் சிறுகதை தொகுப்பில் 2009 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் தேசிய இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுகதைகளைத் தொகுத்து 25 கதைகளாக தொகுத்து இருந்தேன். அடுத்ததாக 2019 ஆம் ஆண்டில் ‘கூடி வாழ்’ என்ற சிறுவர் கதைகள் தொகுப்பினை வெளியிட்டிருந்தேன். இவ் சிறுவர் கதைத் தொகுப்பில் 12 கதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அன்பு, இரக்கம் ,ஒற்றுமை, ஒழுக்கம் ,நட்பு என்ற நல்ல விடயங்களைச் சிறுவர்கள் விளங்கக் கூடிய வகையில் எளிய நடையில் கதைகளைப் படைத்துள்ளேன். எதிர்காலத்தில் நாட்டார் பாடல்கள்- 25 என்ற தொகுப்பு நூலினை எழுதி முடித்துள்ளேன். இத்தொகுப்பு நூலில் நான் போட்டிகளில் எழுதி வெற்றி பெற்ற நாட்டார் பாடல்களையும் இணைத்துள்ளேன். நிதிசார் பிரச்சனை இருப்பதனால் இந்நூலினை வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் இல்லாமல் உள்ளது.

**? திருகோணமலை திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளராக கடமை ஆற்றி வருகின்றமை குறித்தும், அதனூடாக உங்களது கலைசார் செயற்பாடுகள் பற்றியும்?**

நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக எல்லாமே அஸ்தமித்து போயிருந்தன. நீண்ட கால இடைவெளிக்குப் பின்பு 2003ஆம் ஆண்டு எதிர்பாராத



விதமாக திருகோணமலை திருமறைக் கலாமன்றத்தின் இணைந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஆரம்பத்தில் அங்கத்தவராக ஆரம்பித்த என் பயணம் பின் எழுதுவினைஞராக,சிறுவர் கலைக்கூட இணைப்பாளராக, உதவி ஆசிரியராக, செயலாளராக நியமிக்கப்பட்டு படிப்படியான முன்னேற்றத்தின் விளைவாக 2008ஆம் ஆண்டு முதல் இன்றுவரை திருகோணமலை மாவட்ட இணைப்பாளராக எம் மன்றத்தில் சேவையாற்றி வருகின்றேன். எனக்குள் புதைந்து கிடந்த சிறு சிறு திறமைகளையும் வெளிக்கொண்டு வருவதற்கு வழிகாட்டியாக அமைந்து இருந்தது இம் மன்றமே, இதனூடாக எழுதும் ஆர்வமும், வல்லமையும் மென்மேலும் அதிகரித்து இன்றுவரை எழுதுவதற்கான அடித்தளத்தை வழங்கியிருந்தமை எனக்கு கிடைத்த அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன். மேலும் இவ் மன்றத்தின் ஊடாக பல தரப்பட்ட மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பும், சிறுவர்களோடு சேர்ந்து உறவாடி மகிழும் அரிய சந்தர்ப்பமும் எனக்கு கிடைத்த புதிய உற்சாகம் ஆகும். எமது மன்றமானது எமது பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டு அவர்களுக்கான மேடைகளை அமைத்துக் கொடுப்பதற்கான முழு வேலைப்பாட்டுக்கான நிதி வசதியினையும் பொறுப்பெடுத்து வருகின்றது. ஆரம்ப காலங்களில் கைவேலைகள், நடனப் பயிற்சி, தையல் வகுப்பு ,வாத்தியங்கள் மீட்டல்(ஓஹன்) போன்ற பயிற்சி வகுப்புகளை நடத்தி கஷ்ட சூழலிலும் இருக்கின்ற திறமையான மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கி வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். நான் அறிந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தில் கலை மன்ற மாணவர்களின் திறமைகளை வெளிக் கொண்டு அதற்கான பயிற்சிகளை வழங்கி அவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் அளிப்பதற்கான மொத்தச் செலவையும் தங்களது பொறுப்பில் எடுத்து செய்து வருகின்றமை எமது திருமறைக்கலாமன்றம் என்பது பதவிக்குரிய விடயமாகும்.

இதுவரையில் எனது தயாரிப்பில் நாடகங்கள், வில்லுப்பாட்டு, தாளலயம், இசையும் கதையும், பேச்சு போன்றவற்றை மாணவர்களின் மூலமாக மேடையேற்றியுள்ளேன். திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கோயில்களின் திருவிழாக் காலங்களிலும், சிவராத்திரி, நவராத்திரி விரத விழாக்களிலும், அரச நாட்டிய விழாக்கள் , அரசசார்பற்ற நிறுவனங்களின் கலை விழாக்கள், சிறுவர் மற்றும் மகளிர் தின நிகழ்வுகள், மாகாண, மாவட்ட ,தேசிய ரீதியிலான போட்டிகள், நத்தார் பண்டிகை ,சித்திரை வருடப்பிறப்பு

மிகுதி 13 ஆம் பக்கம் பார்க்க...

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 14

# மூத்த எழுத்திலக்கிய கலைஞர் பரமேஸ்வரி அருணாசலம் சாதனைக் கலைப் பயணம்



கொண்டாட்ட நிகழ்வுகள், பொஷன் போன்றவற்றில் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி எம் மன்றத்தின் மூலமாக மேடையேற்றி வருகின்றேன். திருகோணமலை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும் எமது மாணவர்களின் திறமைகள் வெளிக்காட்டப்பட்டு வருகின்றன. மேலும் என்னால் மாணவர்களுக்கு வழங்கும் பயிற்சியினை ஓரிரு நாட்களிலேயே பிடித்துக்கொள்ளும் கெட்டித்தனம் மாணவர்களிடம் மிகையாக உள்ளமையால் எனக்கு பயிற்சி அளிப்பதற்கும் இலகுவாக இருக்கின்றது. இன்றுவரை நான் எனது மன்றத்தால் மேடையேற்றிய நிகழ்வுகள் அனைத்திற்கும் பரிசுகளும் பாராட்டுகளும் கிடைப்பதில் தவறியதில்லை. அத்துடன் எமது மன்றத்தின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் ஆறு மண்டபங்கள் எடுத்து மாணவர்களின் ஆக்க படைப்புகளை மட்டும் கொண்ட கண்காட்சியை நடாத்தி அனைவராலும் வரவேற்கப்பட்டு பாராட்டபட்டமை குறிப்பிடத்தக்க பதிவாகும். எம் மன்றமானது ஆரம்ப காலத்தில் இருந்து இன்றுவரை வசதி குறைந்த நிலையில் இலைமறை காய்களாக இருக்கின்ற பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை இனங்கண்டு அவர்களுக்கான மேடை வாய்ப்பினை அளித்து வருகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும்.

**? இன்றைய காலகட்டத்தில் வளர்ந்து வரும் பெண் கலைஞர்கள் மீதான சமூகத்தின் பார்வை எவ்வாறு உள்ளது?**

தற்சமையம் கலைத்துறையிலும், எழுத்துத் துறையிலும் ஆர்வம் கொண்டு பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். எனினும் பெண் கலைஞர்கள் வெளி உலகத்தில் மிகையாக தெரிவதற்கான கலைச் சூழல் மிகக் குறைவான நிலையில் உள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். இதற்கான காரணம் குடும்ப ரீதியான பொறுப்புக்கள், வெளிச் சுதந்திரமின்மை, ஆண்-பெண் கட்டமைப்பு ரீதியில் பெண் தலைமைத்துவசார் பிரச்சனை என்பவற்றை குறிப்பிடலாம். இவ்வாறான காரணங்களில் இருந்து பெண்கள் விடுபட்டு தங்களது துறைகளில் தத்தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான பாதையினை உருவாக்கி கொள்வதற்கான திடசங்கற்பத்தினையும், மன உறுதியையும் கொண்டு எழுச்சி பெற வேண்டும் .அத்துடன் பெண்ணியப் படைப்பாளிகள் அனைவரும் தங்களது துறையில் எழுச்சி பெறுவதோடு மட்டுமல்லாமல் தங்களுக்கான தனிப்பட்ட ரீதியான பாதுகாப்பு விழிப்புணர்வில் கவனம் எடுக்கும் பட்சத்தில் ஆரோக்கியமான சூழ்நிலை அமையப் பெற்று புகழ் பெறும் கலைஞராக நம் மண்ணுக்கு பெருமை சேர்ப்பதோடு உங்களுக்கென்ற அடையாளத்தையும் வருங்காலத்தில் நிலைநாட்ட முடியும் என்பதே எனது கருத்தாகும்.





**? இத்துறையில் நீங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?**

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் வருடாவருடம் நடாத்திவரும் தேசிய இலக்கிய போட்டிகளில் கடந்த 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2019 வரை பல வகையான விடயங்களில் பங்குபற்றி பரிசில்களையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன். 2016ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் அரங்கக் கலை துறையில் கிழக்கு மாகாண வித்தகர் விருதையும், யாழ் திருமறைக் கலாமன்றம் தலைமைச் செயலக விருதான இயக்குனர் விருதை 2018இலும், தேசிய விருதான கலாபூஷணம் விருது 2019இலும் பெற்றுள்ளேன்.

**? நிறைவாக, உங்கள் அனுபவத்தினூடாக இளைய தலைமுறையினருக்கு கூற விரும்புவது?**

ஒவ்வொரு மனிதனிடத்திலும் கலை ஆர்வம் எவ்வாறு புதைந்து கிடக்கின்றதோ அதுபோலவே அவனிடத்தில் அழியாச் செல்வமான கல்வியும் அவசியம் என்பதே எனது கருத்தாகும். ஒரு மனிதனுக்கு கல்வி என்பது அவனை வாழ வைக்கும் வாழ்க்கைச் சொத்தாகும். அக்கல்வியினை கற்க வேண்டிய வயதில் கற்கும் பட்சத்தில் கல்வியோடு இணைந்து கலைச் செல்வமும் வளரப் பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒவ்வொரு மனிதனும் கலையினை எவ்வாறு நேசிக்கின்றானோ அவ்வாறே கல்வியையும் நேசித்துக் கற்று இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும்.



மேலும் எழுத்து இலக்கியத்துறையில் படைப்புகளைப் படைக்கும் ஒவ்வொரு கலைஞனும் தனக்கான மேடையை தானே அமைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தான் எழுதுகின்ற ஒவ்வொரு எழுத்தையும் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப எழுதுவதோடு மக்களின் மனங்களை காயப்படுத்தாமல் அவர்களின் உள்ளத்திற்கு மன மகிழ்வையும், உற்சாகத்தையும் தூண்டும் வகையில் எழுதக் கூடிய வல்லமையை நீங்கள் பெற வேண்டும். இவ்வாறான பல விடயங்களை நீங்கள் கையாளும்போது மக்களால் வரவேற்கப்பட்டு சிறந்த கலைஞர்களாக மிளிர்வீர்கள் என்பதை இத்தருணத்தில் கூறிக்கொண்டு, எம் போன்ற மூத்த கலைஞர்களுக்கான களத்தினை 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதியின் ஊடாக வாய்ப்பளித்து வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு இப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.



**நன்றி!**

**திருகோணமலை மண்ணில் ஒரு பெண் படைப்பாளியாக அரிய பல கலைச் சேவைகளை இன்றுவரை ஆக்கப்பூர்வமாக ஆற்றிவரும் இக் கலைஞர் மென்மேலும் பல சாதனைகளை மேற்கொண்டு எழுத்திலக்கியம் மற்றும் கலைத் துறையினூடாக நம் மண்ணுக்கு புகழ் சேர்க்க வேண்டும் என பிரார்த்திப்பதோடு இப்பணித் தொடர இக் கலைஞரை வாழ்த்துகின்றேன்.**

**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**




ABOLISH THE PTA
மட்டக்களப்பு காந்தி பூங்கா
27.02.2022
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்க வேண்டும்
ත්‍රස්තවාදය වැළැක්වීමේ පනත අහෝසි කරනු
ABOLISH THE PREVENTION OF TERRORISM ACT
இலங்கைத் தமிழரசுக் கட்சி
வாலிப முன்னணி மட்டக்களப்பு